# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 239 சனி, ஜூன் 17, 2023 14 பக்கம்




## தமிழ்ப் பௌத்தம் தொடர்பாக ரணில் சொன்னது எதற்காக?!

அகிலன்

## “எங்களை வாழவிடுங்கள் அல்லது எங்களை கொன்றுவிடுங்கள்”

மட்டு.நகரான்

## சா(தி)தீ... தமிழ்த்தேசியத்தின் சாபக்கேடு!

பா.அரியநேத்திரன்

# இலங்கையில் அணுமின் நிலையம்
## அணுசக்தி நிறுவனம் ஆய்வு

இலங்கையில் அணுமின் நிலையத்தை நிர்மாணிக்க Rosatom உதவும் என RIA Novosti தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்திற்கு அந் நாட்டு அதிகாரிகள் அனுமதி அளித்துள்ளதாகவும், IAEA நிபுணர்களால் இது ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் ரஷ்ய கூட்டமைப்புக்கான இலங்கை தூதுவர் ஜனிதா லியனகே தெரிவித்துள்ளார்.

தூதுவரின் கூற்றுப்படி, அணுமின் நிலையத்தை மிதக்க வைப்பது மதிப்புள்ளதா அல்லது தரையில் கட்டுவது மதிப்புக்குரியதா என்பது குறித்து இன்னும் விவாதம் நடந்து வருகிறது.

அணுமின் நிலையங்களில் பணிபுரியும் நிபுணர்களுக்கு பயிற்சி அளிக்கவும் ரோசாட்டம் உதவும்.



நாட்டில் நிலவும் எரிசக்தி பற்றாக்குறை பிரச்சினையை அணுசக்தியால் மட்டுமே தீர்க்க முடியும் என தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் ஜூன் 19 ஆம் திகதி ஆரம்பம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் திங்கட்கிழமை(19) ஆரம்பமாகவுள்ளது.



கூட்டத் தொடர் ஜூன் 19 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 14 ஆம் திகதி வரை சுவிட் சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடைபெறவுள்ளது.

இலங்கை தொடர்பிலான வாய்மொழி மூல அறிக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன்போது இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் விடயங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

கூட்டத்தொடரில் ஐ.நாவிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி சுபாஷினி

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## எல்லா துறைகளிலும் இணைந்து செயற்பட சீனா - பலஸ்தீனம் இணக்கம்

எல்லா துறைகளிலும் இணைந்து செயற்படுவதற்கான உடன்பாடு ஒன்று சீன தலைவர் சி ஜின்பின்னுக்கும் பலஸ்தீனத் தலைவர் முகமட் அப்பாஸ் அவர்களுக்குமிடையில் கடந்த புதன்கிழமை (14) எட்டப்பட்டுள்ளது.

இரு நாடுகளினதும் வரலாற்றில் மிகப்பெரும் திருப்பமாக இந்த உடன்பாடு இன்று எட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் பலஸ்தீன மக்களுடன் சீனா தோளோடு தோளாக நிற்கும் என சீன அதிபர் இந்த உடன்பாட்டின் பின்னர் கருத்து தெரிவிக்கும்போது தெரிவித்துள்ளார்.



மத்திய கிழக்கு நாடுகள் எதிர்நோக்கும் சவால்களை சமாளிப்பதற்கு சீனா உதவும் என்பதுடன், நீண்ட காலமாக தீர்க்கப்படாத பலஸ்தீன மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும் சீனா

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## பிரித்தானியாவில் வீட்டு விலை 35 விகிதத்தால் வீழ்ச்சி அடையலாம்

உலகில் ஏற்பட்டுவரும் பொருளாதார நெருக்கடி பல நாடுகளில் பணவீக்கத்தையும், பொருளாதார வீழ்ச்சிகளையும் ஏற்படுத்திவருகின்ற நிலையில் பிரித்தானியாவில் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு வீட்டு விலைகள் 35 விகிதத்தால் வீழ்ச்சி அடையலாம் என பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் This is Money என்ற சஞ்சிகை இந்த வாரம் தெரிவித்துள்ளது.

பணவீக்கத்தை தடுப்பதற்காக பிரித்தானியா உட்பட




பல நாடுகள் வட்டிவிகிதத்தை தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## மனிதர்களின் ஆயுளை அதிகரிக்கும் புதிய அமினோ அமிலம்



மீன் மற்றும் இறைச்சி வகைகளில் காணப்படும் taurine எனப்படும் அமினோ அமிலம் மனிதர்களின் ஆயுட்காலத்தை அதிகரிக்க உதவுவதுடன் அவர்களை இளைமையாகவும் வைத்திருக்க உதவுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

எலிகள் மற்றும் குரங்குகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மிருகங்களின் ஆயுட்காலம் 12 விகிதத்தால் அதிகரித்து இருந்ததாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மனிதர்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், மனிதர்களின் வாழ்நாளை அதிகரிப்பதுடன், அவர்களை உடல்நலத்துடனும் வாழ வைக்கலாம் என கொலம்பியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த இந்த ஆய்வு குழுவின் தலைவர் பேராசிரியர் விஜய் யாதவ் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வின் முடிவுகள் the journal Science என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அமினோ அமிலம் முட்டை, இறைச்சி மற்றும் மீன்களில் காணப்படுகின்றது. அது மனிதர்களின்


தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## கிறீஸில் 750 பேரை ஏற்றிவந்த படகு கவிழ்ந்ததால் 78 பேர் பலி

கடந்த புதன்கிழமை (14) கிறீஸ் நாட்டின் தென்பகுதியில் உள்ள கடலில் இடம்பெயர்ந்தோரை ஏற்றி வந்த படகு ஒன்று கடலில் மூழ்கியதால் இதுவரை 78 பேர் கொல்லப்பட்டதாகவும், 100 இற்கு மேற்பட்டவர்கள் காப்பாற்றப் பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

இந்த படகில் 750 இற்கு மேற்பட்டவர்கள் ஏற்றிவரப்பட்டதாகவும், அவர்களில் 100 இற்கு மேற்பட்டவர்கள் சிறுவர்கள் எனவும் உயிர் தப்பியவர்கள் தெரிவித்துள்ளனர். இடம்பெயர்ந்து வருபவர்கள் தொடர்பில் கிறீஸ் நாட்டில் இடம்பெற்ற மிகப்பெரும் அழிவு இது என தெரிவித்துள்ள கிறீஸ் அரசு மூன்று நாட்களை துக்க தினங்களாக அறிவித்துள்ளது.

இந்த படகை தாம் செவ்வாய்க்கிழமை (13) காலை அவதானித்து கிறீஸ் மற்றும் இத்தாலிய அதிகாரிகளுக்கு அறிவித்ததாகவும், படகில் பயணம் செய்தவர்கள் எவரும் உயிர்காப்பு அங்கிகள் அணிந்திருக்கவில்லை எனவும் ஐரோப்பிய ஒன்றிய கரையோர காவல்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



செவ்வாய்க்கிழமை மதியம் படகுடன் கிறீஸ் அதிகாரிகள் தொடர்புகளை மேற்கொண்ட போது அவர்கள் உதவி கோரவில்லை. தாம் இத்தாலிக்கு செல்வதாக தெரிவித்தனர். பின்னர் மாலை ஆறு மணிக்கு அவர்களுக்கு வேறு ஒரு படகில் இருந்து உணவும் நீரும் வழங்கப்பட்டது. அதன்பின்னர் புதன் கிழமை அதிகாலை 1.40 மணியளவில் படகின் இயந்திரம் பழுதடைந்துவிட்டதாக கிறீக் அதிகாரிகளுக்கு தகவல் அனுப்பப்பட்டது. ஆனால் தகவல் கிடைத்த 10 நிமிடங்களில் படகு முற்றாக கடலில் மூழ்கிவிட்டது.

### இடைநிறுத்தப்பட்ட பயணத்தை மீண்டும் ஆரம்பிக்கின்றார்
## அமெரிக்க வெளிவிவகார செயலாளர்



சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உளவு பலூன் தொடர்பில் எழுந்த சர்ச்சையால் ஒத்திவைக்கப்பட்ட பயணத்தை மீண்டும் அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் ஆரம்பித்துள்ளதாக வொசிங்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2018 ஆம் ஆண்டு அன்றைய வெளிவிவகாரச் செயலாளர் மைக் பொம்பியோவின் பயணத்தின் பின்னர் அமெரிக்காவின் உயர் மட்ட அதிகாரி ஒருவர் சீனாவுக்கு செல்வது இதுவே முதல்தடவையாகும். சீனா பயணத்தின் போது அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் அந்தோனி பிளிங்டன் பிரித்தானியாவுக்கும் பயணத்தை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

இந்த வாரம் இடம்பெறும் இந்த பயணத்தின் போது அவர் சீனாவின் உயர்மட்ட அதிகாரிகளை சந்தித்து பேச்சுக்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தொல்லியல் திணைக் களத்தின் காணிகள் தொடர்பில் ஆராய்வதற்கான ஆணை குழு தமிழர்களையும் ஏமாற்றுவதற்கே

**அருட்தந்தை சத்திவேல்**

முல்லைத்தீவு குருந்தூர் மலை சார்ந்த காணி விடயம் தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி அவர்கள் "வடக்கிலே குறுந்தூர் மலை தமிழ் பௌத்தம் சார்ந்தது" என்றதோடு தொல்லியல் திணைக்கள ஆணையாளரை பார்த்து "மகா விகாரையை விட அதிக காணி தேவையா?" என கேள்வி எழுப்பியதோடு கடும் தொனியில் "அமைச்சரவை முடிவை நிறைவேற்ற வேண்டும், எனக்கு வரலாற்று கற்றுக் கொடுக்க வேண்டாம்" எனக் கூறியதைத் தொடர்ந்து தொல்லியல் திணைக்கள ஆணையர் பதவி விலகியுள்ளார். இது தமிழர்களுக்கு மகிழ்ச்சியை உண்டு பண்ணி உள்ளது. சிங்கள பௌத்தர்களுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளதோடு; ஜனாதிபதிக்கு எதிராக கருத்துக்களையும் வெளியிடுகின்றனர்.

பிந்திக் கிடைக்கும் செய்தியின்படி ஜனாதிபதி எல்லாவல மேதாநந்த தேரர் அவர்களுக்கு அவசரமாக அனுப்பிய கடிதத்தில் "தொல்லியல் திணைக்களம் அடையாளப்படுத்திய குருந்தூர் மலை பிரதேச காணிகளில் நான் எவரையும் குடிய மர்த்த மாட்டேன்" எனக் கூறியுள்ளார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே 1933 மே 12ஆம் தேதி வர்த்தமானியில் "குருந்தூர் மலை" என்று குறிப்பிடப்படுகின்றது. இதனை பொறுத்துக் கொள்ள முடியாத சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பாளர்கள் குருந்தூர் விகாரை எனக் கூறுவதோடு நீதிமன்ற கட்டளைகளை மீறி விகாரை நிர்மாணிப்பதை தொடர்கின்றனர். அது

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# பௌத்த மயமாக்கல் என்னும் பெயரில் வடக்கு மற்றும் கிழக்கில் தொடர்ந்து இனவழிப்பு நடவடிக்கை

**வேலன் சுவாமிகள்**

பௌத்த மயமாக்கல் என்னும் பெயரில் வடக்கு மற்றும் கிழக்கில் தொடர்ந்தும் திட்டமிட்ட இனவழிப்பு நடைபெறுகின்றது என சிவில் உரிமை செயற்பாட்டாளரும், இந்து சமய தலைவருமான வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.



தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட வகையில், கட்டமைக்கப்பட்டு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இனவழிப்புக்கு நீதி கோரியும் அதனை தடுத்து நிறுத்த கோரியும், பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுடன், தமிழர் தரப்பினர் மாநாடு ஒன்றினை நடத்தியுள்ளனர்.



கடந்த 14ம் திகதி பிரித்தானியா பாராளுமன்ற வளாகத்தில் இந்த மாநாடு இடம்பெற்றுள்ளது.

சிறப்பாக தாயகத்திலிருந்து வருகை தந்திருந்த

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

இலக்கு

# ஈழத்தமிழ் அரசியல்வாதிகளே இறைமைப்பிரச்சினையென்பதை அரசியல் பிரச்சினையாக்கி இனஅழிப்பை நியாயப்படுதத உதவாதீர்கள்

ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் தாயகத்திலும் புலத்திலும் ஈழத்தமிழரின் தேசியப்பிரச்சனை என்பது இறைமைப்பிரச்சினை என்ற அடிப்படை உண்மையை விடுத்து அதனை ஒரு அரசியல் பிரச்சினையாக மாற்றி அரசியல் தீர்வு காண வேண்டுமெனச் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஈழத்தமிழின அழிப்பை அவர்கள் நியாயப்படுத்த உதவுகின்றார்கள். அத்துடன் ஒரு சனநாயக ஆட்சியில் உள்ளவர்கள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலும் முறையியல்களையும் ஈழத்தின் புத்திஜீவிகள் ஒரு தப்பிப் பிழைக்கும் பொறிமுறையாக மக்கள் முன் எடுத்துரைத்து சிறிலங்காவுக்குள் தீர்வு காணலாம் என்ற மயக்கத்தை ஏற்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினையென்றால் என்ன என்பதில் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் தெளிவுபெற வேண்டும். ஈழத்தமிழர்கள் தங்கள் சொந்த மண்ணான இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தங்களது தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட இறைமையின் அடிப்படையில் தங்களுக்கான தன்னாட்சியைப்பயன்படுத்தி வாழ இயலாமையே இன்றைய அவர்களின் தேசியப் பிரச்சினையாக உள்ளது. இது இறைமைப்பிரச்சினையே தவிர சிறுபான்மையினப் பிரச்சினையோ அல்லது மொழி மத பிரச்சினையோ அல்ல.

அத்தகைய வடிவங்களைச் சிறிலங்காவே காலத்துக்குக் காலம் தூண்டிவிட்டு ஈழத்தமிழர் இறைமைப் பிரச்சினையை ஈழத்தமிழர்களே சிறிலங்காவுக்குள் தீர்வு காண வேண்டிய அரசியல் பிரச்சினையாக வெளிப்படுத்த வைக்கச் செய்கிறது. இந்தப் பின்னணியில்தான் சிறிலங்காவின் அரசத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா குருந்தூர்மலையில் பௌத்த கலங்கரை விளக்கம்தான் இருந்தது விகாரையல்ல. அவை தமிழ் பௌத்தத்தின் தொன்மை அடையாளங்கள் அப்படியிருக்க அங்கு ஏன் மகாவிகாரையை விட அதிக நிலப்பரப்பினை கையகப்படுத்தி வைத்துள்ளீர்கள் எனத் தனது தொல்லியல் பணிப்பாளரிடமே கேள்வி கேட்டதும் அவர் பதவி விலகியதுமான கடந்த வார நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. அதே நேரத்தில் அரசத்தலைவரின் செயலாளர் மகாநாயக்கர்களுக்கு குருந்தூர்மலையில் மேலதிகமாகக் கைப்பற்றப்பட்ட காணிகள் அரசகாணிகளாகவே இருக்கும் அவை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட மாட்டாது என உறுதிப்படுத்திக் கடிதமும் வழங்கியுள்ளார். இம்மாதம் 21ம் திகதி ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மொழி அறிக்கைக்குச் சிறிலங்காவின் பிரதிநிதி பதிலளிக்க வேண்டிய நிலை உள்ளதால் நரித்தந்திர அரசியல்வாதியான ரணில் அதனை வெற்றிகரமாகக் கையாள்வதற்கான தனது வேலைகளைத் தொடங்கி விட்டமை தெளிவாகிறது.

அதே நேரத்தில் இந்திய அமெரிக்க கூட்டொருங்குத் தலைமைத்துவத்தின் வழி சிறிலங்காவின் பிரச்சினைகளுக்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்த தீர்வுகளை முன்வைக்க வேண்டுமென்ற கருத்து வெளிப்படையாகவே சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை உறுதி செய்யும் நிகழ்வுகளாக அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்களுடன் இருதரப்பு ஒத்துழைப்புக்கள் குறித்துப் பேச்சுக்களை நடத்தியதும் அதனை அடுத்து சிக்கலான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான வட்டமேசை மாநாடு நடைபெற்றதும் இவ்விருநாடுகளுக்கும் இடையில் கூட்டொருங்குச் செயற்பாடுகள் மேலும் பலம் பெறுவதை உலகுக்கு உணர்த்தியுள்ளது. இதனை உறுதி செய்யும் வகையில் இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித்கோவல் இந்திய அமெரிக்க இருதரப்பு மூலோபாயக் கூட்டாண்மையின் முக்கிய தூண்களில் ஒன்றாக இது வெளிப்படும் எனக் கூறியுள்ளார். இந்தப் பின்னணியில் தான் பாரதிய ஜனதாக்கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் அண்ணாமலை அவர்கள் இலண்டனில் உள்ள ஈழத்தமிழர்களின் புலம்பெயர் அமைப்புக்களைச் சார்ந்த சிலரைச் சந்தித்து தங்கள் மூலமாக சிறிலங்காவில் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை நெறிப்படுத்த இலண்டனுக்கு இவ்வாரத்தில் செல்லவுள்ளார்.

ஈழத்தமிழர் தேசியப்பிரச்சினை என்பது ஈழத்தமிழர்களின் இறைமையைப் பாதுகாக்கும் போராட்டமே தவிர அது பிரிவினைவாதப் போராட்டமில்லை. இதனை மறந்து, அதனை அரசியல் போராட்டம் என உலகம் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் இன்றைய ஈழத்தமிழர்களின் பதிவுசெய்யப்பட்ட 13 ஈழத்தமிழ் அரசியல் கட்சிகளும் பிரிவினை கோரவில்லையெனவும் அதில் யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர்ந்த 12 கட்சிகளும் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை சிறிலங்காப் பிரதமரிடமோ இந்தியப் பிரதமரிடமோ கோரியுள்ளனர் எனவும் இவ்வாரத்தில் செவ்வியளித்துள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் வட மாகாணசபைத் தலைவரும் முன்னாள் நீதியரசருமான சட்டவறிஞர் சி. வி. விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளமை சட்டம் படித்த தமிழர்களால் ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினை வெறும் சிறுபான்மையினப் பிரச்சினையாக திரிபுபடுத்தப்படுவதற்கு மற்றொரு உதாரணமாகிறது. இதே நிலைப்பாட்டினை அரசியலாக்கிய சம்பந்தர் அவர்கள் இன்று 14 ஆண்டுகளுக்குப் பின் ஓரிரு மாதங்களுக்குள் ரணில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் ஈழத்தமிழர்களின் வெளியகத் தன்னாட்சி உரிமையை வெளிப்படையாகப் பயன்படுத்துவது குறித்து சிந்திக்கப்போவதாக வரக்கூடிய தேர்தலைத் தனது கட்சியினர் எதிர்கொள்வதற்கான வாய்ச்சவாடலையும் விடுத்துள்ளார்.

அதே நேரத்தில் காலனித்துவ பிரித்தானிய அரசாங்கத்தால் 1833 இல் உருவாக்கப்பட்ட கோல்புறூக் கமரோன் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் தொடங்கப்பட்டு இன்று வரை 190 ஆண்டுகளாகத் தொடரும் காலனித்துவத்தால் தீர்க்கப்படாத ஐக்கியநாடுகள் சபையால் தீர்க்கப்பட வேண்டிய அனைத்துலகப் பிரச்சினையாக உள்ளது என்ற உண்மையின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் தன்னாட்சியைப் பயன்படுத்தி வாழ இயலாத எல்லைகளில் வாழும் மக்களெனப் பிரகடனப்படுத்தி அவர்களுக்கான நிர்வாகத்தைச் சீரமைக்க ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதியை நியமிக்குமாறு யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் சட்டத்தரணியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாண்டு ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் வேண்டுகோள் விடுத்தார். இதற்காக அவர் சிறிலங்காப் புலனாய்வாளர்களால் சிவில் உடையில் கொலைமுயற்சிக்கு உள்ளானதும் அல்லாமல் அவர் பொலிசாரை கடமைசெய்ய விடாது தடுத்தார் என அவரது பாராளுமன்றச் சிறப்புரிமையையும் மீறி அவரைக் கைது செய்து பிணையில் விட்டு இவ்வாரத்தில் மீளவும் அவரின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்து அவருக்கு இனங்காணக்கூடிய அச்சத்தைப் பொலிசார் விளைவித்து வருகின்றனர். கூடவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித்தலைவி வாசுகி சுதாகர் யாழ்மாவட்ட அமைப்பாளர் தீபன் திலீசன் மகளிர்அணிச் செயற்பாட்டாளர் கிருபா கிரிதரன் ஆகிய மூன்று ஈழத்தமிழர்களையும் கடந்த வியாழக்கிழமை சிறிலங்காப் பொலிசார் கைது செய்து "மக்களை இனங்காணக்கூடிய அச்சத்துக்கு உள்ளாக்கி அவர்களின் அரசியல் பணிவைப்பெறுகின்ற சிறிலங்காவின் அனைத்துலகச் சட்டங்களுக்கு எதிரான குற்றச்செயலையம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் இலக்கு 'ஈழத்தமிழ் அரசியல்வாதிகளே! ஈழத்தமிழர்களின் இறைமைப்பிரச்சினையென்பதை அரசியல் பிரச்சினையாக்கி சிறிலங்காவின் இனஅழிப்பை அது நியாயப்படுதத உதவாதீர்கள்; மண் மீட்புப் போர்தான் தமிழீழத்தேசிய விடுதலைப் போராட்டம். அதுதான் இன்று துப்பாக்கிகள் மௌனித்த நிலையில் சனநாயகத்தின் வழி மண்ணை மீட்பதற்கான மக்கள் போராட்டமாகத் தொடர்கிறது என்ற உண்மையை உலகுக்கு எடுத்துச் சொல்லுங்கள்" என்ற வேண்டுகோளை விடுக்க விரும்புகிறது.

**ஆசிரியர்**



# தமிழ்ப் பௌத்தம் தொடர்பாக ரணில் சொன்னது எதற்காக?!

அகிலன்

கொழும்பு அரசியலில் அதிரடியாக இடம்பெற்ற சில சம்பவங்கள் பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றன. தொல்லியல் பணிப்பாளரின் திடீர் இராஜினாமா, அதற்குக் காரணமாக இருந்த ஜனாதிபதி செயலக சந்திப்பு, அங்கு ஜனாதிபதி நிகழ்த்திய உரை, இதனையடுத்து மீண்டும் போர்க்கொடி தூக்கியிருக்கும் சிங்கள-பௌத்த பேரினவாதிகள் என்பனதான் கடந்த சில வாரங்களாக தலைப்புச் செய்தியாக இடம்பிடித்திருக்கின்றது. இவற்றின் பின்னணியில் உள்ள அரசியல் என்ன என்பதை இந்த வாரம் பார்ப்போம்.



இலங்கையில் ஜனாதிபதி ஒருவர் முதல் தடவையாக தமிழ் பௌத்தம் தொடர்பாகப் பேசியிருக்கின்றார். தொல்லியல் திணைக்களத்தின் ஆதரவுடன், வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ்ப் பௌத்தம் என்று ஒன்றே இருக்கவில்லை, சிங்கள பௌத்தம் மட்டுமே இருந்துள்ளது என நிறுவுதற்கு சிங்களப் பேரினவாதிகள் முழு முனைப்புடன் செயற்பட்டுவரும் நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் பௌத்தம் குறித்து தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் பேராசிரியர் அனுரா மனதுங்கவுக்கு "பாடம்" நடத்தியிருக்கின்றார். அதுவும் அமைச்சர்கள், எம்.பி.க்கள், அதிகாரிகள் முன்னிலையில் வைத்து.

இச்சம்பவம் இடம்பெற்றது கடந்த வியாழக்கிழமை. ஆனால், இது தொடர்பான செய்திகள் எதுவும் உடனடியாகக் கசியவில்லை. இதில் பங்கேற்றிருந்த தமிழ் எம்.பி.க்களும் அங்கு தாம் என்ன சொன்னார்கள் என்பதை செய்தியாகக் கொடுத்தார்கள். ஜனாதிபதிக்கும் தொல்லியல் பணிப்பாளருக்கும் இடையில் இடம்பெற்ற முரண்பாடு அவர்களுக்குப் புரிந்திருக்கவில்லை. இந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த காணொளி கசியவிடப்பட்டது.



“நீங்கள் எனக்கு வரலாறு கற்றுக் கொடுக்கிறீர்களா? அல்லது உங்களுக்கு நான் வரலாற்றைக் கற்றுத் தரவா?” என்று ஜனாதிபதி கடும் தொனியில் பணிப்பாளருக்கு வகுப்பெடுக்க முற்பட்ட காட்சி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அந்தக் காணொளி வைரலாக பரவியது. சமூக ஊடகங்களில் அதனைப் பார்த்த சிங்கள மக்கள் அதிர்ச்சியடைந்தார்கள். அதனையடுத்து சில மணி நேரங்களிலேயே அவமானத்தால் பணிப்பாளர் அனுரா மனதுங்க தனது ராஜினாமா கடிதத்தை அனுப்பினார். ஜனாதிபதி ரணில் இதனை எதிர்பார்த்திருக்க வேண்டும். அவரிடமிருந்து அதற்கு எந்த பிரதிபலிப்பும் வரவில்லை.

அன்றைய கூட்டத்தில் ரணில் தெரிவித்த கருத்துக்களில் இரண்டு விடயங்கள் கவனத்தைப் பெறுகின்றன. முதலாவது, தொல்பொருள் திணைக்களம் காணிகளைப் பெருமளவுக்கு கையகப்படுத்தி அவை தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் குறிப்பிட்டு அவற்றில் விகாரைகளை அமைப்பதற்கு எதிராக அவர் குரல் கொடுத்திருக்கின்றார். அல்லது உத்தரவு பிறப்பித்திருக்கின்றார். இரண்டாவது - தமிழ் பௌத்தம் தொடர்பாக முதல் தடவையாகப் பேசியிருக்கின்றார். அதாவது, தமிழ் பௌத்தம் இருந்துள்ளது என்பது வரலாற்றில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என்ற கருத்தை அவர் வெளியிட்டார்.

தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என தொல்லியல் திணைக்களம் கண்டுபிடிக்கிற இடங்களை தொல்லியல் திணைக் களம் பொறுப்பெடுத்து பாதுகாக்காமல், அவற்றை பௌத்த பிக்குகளிடம் ஒப்படைக்கிறது. சுற்றி உள்ள தமிழர் நிலங்களையும் சேர்த்து அந்த பிக்குகளுக்கு வழங்கி புதிய விகாரைகளையும் அமைக்க வழி ஏற்படுத்திக் கொடுக்கிறது. அதன் பின்னர் அந்த பிக்குமார் அந்த விவசாய காணிகளை அங்கிருக்கும் மக்களுக்கே குத்தகைக்கு கொடுக்கிற அநியாயமும் நடப்பதாகவும் ஒரு தகவல் உள்ளது. இது அப்பட்டமான ஒரு ஆக்கிரமிப்பு.

தொல்லியல் இடங்களாக அடையாளம் கண்டால் அவை மேலும் சிதைவடையாமல் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கலாமே தவிர, அங்கே புதிய கட்டுமானங்களை செய்ய முடியாது என்பது தொல்லியல் விதி.

அதேவேளையில், இங்கு புதிய கட்டுமானங்களை விகாரைகளை அமைப்பதற்குத் தேவையான நிதி தனிப்பட்டவர்களிடமிருந்தும், வெளிநாடுகளில் வசிக்கும் சிங்களவர்களிடமிருந்தும் தொல்லியல் திணைக்களத்துக்கு வழங்கப்படுகின்றது. இந்த நிலையில், அரச நிதியில் தங்கியிருக்காமல் தமது இஸ்டப்படி செயற்படுவதற்கு தொல்லியல் திணைக்களம் முற்படுகின்றது. இதற்கான நிதி எவ்வளவு வருகின்றது எப்படி வருகின்றது என்ற தகவல்கள் அரசாங்கத்திடம் இல்லை. இது தொடர்பாக ஜனாதிபதி ஒரு தடவை கேள்வி எழுப்பிய போது, பிக்குமார்தான் நிதியை சேகரித்து இந்த கட்டுமாணங்களுக்காக வழங்குவதாக தொல்பொருள் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

ரணிலைப் பொறுத்தவரையில் அவர் லிபரல் சிந்தனை கொண்ட ஒருவராகக் கருதப்படுபவர். அதேவேளையில் வரலாறு, பொருளாதாரம், அரசியல் விஞ்ஞானம் உட்பட பல விடயங்களில் தெளிவான அறிவைக்கொண்ட ஒருவர். அந்த நிலையில்தான் தொல்லியல் திணைக்கள பணிப்பாளருக்கு அவர் பாடம் எடுக்க முற்பட்டிருக்கின்றார். ரணில் சொன்ன விடயங்கள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கலாம். ஆனால், இதனை எதற்காக அவர் சொன்னார் என்பதும், அந்த நிலைப்பாட்டில் அவர் உறுதியாக இருப்பாரா என்பதும் கேள்விக்குறிதான். அது ஏன் என்பதையும் பார்ப்போம்.

ஆனால், ரணில் ஒரு தனிநபர் அல்ல. அவர் பௌத்த சிங்கள கடுங்கோட்பாடுகளால் கட்டியமைக்கப்பட்ட அல்லது நிறுவன மயப்படுத்தப்பட்ட ஒரு அரசின் தலைவர். இந்த நிலையில் தற்போது அவர் சொல்லியுள்ள விடயங்களில் தொடர்ந்தும் உறுதிப்பாட்டுடன் இருப்பாரா என்ற கேள்வி உள்ளது. பல விடயங்களில் ரணில் தனது லிபரல் சிந்தனையை வெளிப் படுத்தியிருந்தாலும், பின்னர் பௌத்த – சிங்கள கடும் போக்காளர்கள் சீற்றமடையும் போது பம்மிக்கொண்டிருப்பது வழமையானதுதான். குறிப்பாக 13 குறித்து பேசிய அவர் இப்போது, இடைக்கால ஆலோசனைச் சபையை ஒரு தீர்வாக முன்வைக்க முற்படுவது அனைவருக்கும் தெரியும்.

தற்போது தொல்பொருள்திணைக்களத்தின் மூலமான ஆக்கிரமிப்பு தொடர்பாக தமிழ்த் தரப்பு கடுமையாக குரல் கொடுத்து வருகின்றது. போராட்டங்களையும் முடுக்கிவிட்டுள்ளன. கஜேந்திரகுமார் கைது போன்றனவும் இந்தப் பின்னணியில்தான் இடம்பெற்றன. இது சர்வதேச அரங்கில் இலங்கைக்கு எதிரான பிரசாரங்களுக்கு பலத்தைக்கொடுத்துள்ளன. இந்த நிலையில், இந்த விவகாரத்தை ஓரளவுக்காவது சமப்படுத்த வேண்டிய தேவை - அல்லது நிர்ப்பந்தம் ரணிலுக்கு இருந்துள்ளது. அதற்காக அவர் தொல்பொருள் பணிப்பாளரை பலிகொடுத்தாரா என்ற கேள்வியும் உள்ளது.



இந்த சம்பவத்தைத் தொடர்ந்து ரணிலுக்கு எதிராக பிக்குமார்களும் இனவாத அமைப்புகளும் களத்தில் இறங்கத் தொடங்கி இருப்பதைக் காண முடிகிறது. குறிப்பாக உதய கம்பன்பிலவின் கட்சி உட்பட பல இனவாத அமைப்புக்களும், பௌத்த பிக்குகளும் ரணிலுக்கு எதிரான நகர்வுகளுக்கு இந்த விடயத்தை கைகளில் எடுத்துள்ளன. ஊடக சந்திப்புகள், கண்டன அறிக்கைகள் எல்லாம் ஏற்கெனவே வெளிவரத் தொடங்கிவிட்டன. சமூக வலைத்தளங்கள் எங்கும் சிங்களத்தில் ரணிலுக்கு கொடுத்து வரும் தாக்குதல்களும், பேச்சுக்களும் ரணில் மீது கடும் எதிர்ப்பலை தொடங்கப்பட்டுவிட்டதை உறுதிபடுத்துகின்றன.

நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் பொதுஜன பெரமுன இந்த விவகாரம் குறித்து தற்போதைய நிலையில் மௌனமாக இருந்தாலும், தருணம் வரும்போது இந்த விவகாரத்தைக் கைகளில் எடுக்கும். இந்தப் பின்னணியில் அடுத்த வருட முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளப்போகும் ரணில் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பாரா? அதற்கான துணிச்சல் அவருக்கு உள்ளதா?

• • •

# இடைக்கால நிர்வாக சபை; ரணிலின் உபாயம் என்ன?



வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடைக்கால நிர்வாக சபைகளை அமைப்பது என்பது தொடர்பில் இப்போது அரசியல் அரங்கில் பேசப்படுகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைத்த இந்த யோசனையை பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் நிராகரித்துள்ளன. மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தாமல் தவிர்ப்பதற்கான உபாயமாக ரணில் இதனைப் பயன்படுத்துகின்றார் என்ற கருத்து அவர்களால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இதன் பின்னணியிலுள்ள ரணிலின் உபாயம் என்ன? இதனை தமிழ் மக்கள் ஏற்கலாமா போன்ற கேள்விகளுடன் இந்த வாரம் தாயகக் களம் நிகழ்வுக்காக பேராசிரியர் **கே.ரி.கணேசலிங்கம்** அவர்களைச் சந்திக்கிறோம்

பேராசிரியர் **கே.ரி.கணேசலிங்கம்** செவ்வி

**மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இப்போதைக்கு நடைபெறாது என்றும். இடைக்கால நிர்வாக சபையை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அமைக்கலாம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார். இதில் உண்மையில் ஜனாதிபதியின் நோக்கம் என்னவாக இருக்கின்றது?**

இலங்கையில் இவ்வாறான இடைக்கால நிர்வாகம் அல்லது கட்டமைப்புக்கள் தொடர்பான பேச்சுக்கள்அவ்வப்போது,அரசியல் நோக்கங்களை நிறைவு செய்வதற்காக கையாளப்படுகின்ற ஒரு செயன்முறையாகத்தான் இருந்து வருகின்றது. அவ்வாறான ஒரு தேவைப்பாடு தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்துக்குத் தேவையானதாக இருந்திருக்கலாம்.

அதேபோல, தேர்தல்களை ஒத்திவைப்பதால் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான ஒரு தந்திரோபாயமாக இதனைப் பயன்படுத்துவதற்கான தேவை தற்போதைய அரசாங்கத்துக்கு இருப்பதாகத்தான் நான் கருதுகின்றேன்.

இந்தப் பின்னணியில்தான் தற்போது, இடைக்கால நிர்வாகம் தொடர்பான உரையாடல்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றன. ஜனாதிபதித் தேர்தலை நோக்கி செல்வதற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்கு தமது இருப்பைத் தக்க வைத்துக்கொள்வதற்கும் இவ்வாறான ஒரு கட்டமைப்பு அரசாங்கத்துக்குத் தேவையாக இருக்கலாம். இவை அனைத்தையும் கருத்திற்கொண்டுதான்இவ்வாறானஒருநகர்வைஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்திருக்கின்றார் என்று கருதுகிறேன்.

**இவ்வாறான சபை ஒன்று அமைக்கப்பட்டால், அதன் உறுப்பினர்களை நியமிப்பதற்கான அதிகாரம் யாரிடம் இருக்கும்? ஜனாதிபதியிடம்தான் இருக்குமா?**

இலங்கையின் வரலாற்றில் இதுவரை காலமும் இடைக்கால நிர்வாகம் தொடர்பான உரையாடல்களில் உள்ள அனுபவம், அல்லது இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உரையாடல்களிலும், அல்லது அதற்கு முற்பட்ட கால அனுபவங்களிலும் இவை ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு உட்பட்டதாகவே இருந்துள்ளது.

**இடைக்கால நிர்வாகம் என அமைக்கப்படும் இந்தக் கட்டமைப்பு நிரந்தரமானதாகிவிடக்கூடிய ஆபத்து உள்ளதா?**

வடக்கு கிழக்குக்கு என இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்கப்படும் போது அது நிரந்தரமானதாகவிடுவதைத்தான் கடந்த காலங்களில் அரசாங்கங்கள் விரும்பியிருக்கின்றன. மாகாண சபைத் தேர்தலைக்கூட அவர்கள் கைவிடுகின்ற அல்லது ஒத்திவைக்கின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. அல்லது மாகாண சபையை இல்லாமல் செய்தல் என்பதும் அவர்களுடைய நிகழ்ச்சி நிரலில் இருக்கின்றது. இதனால், வடக்கு கிழக்கு உட்பட அனைத்து மாகாணங்களையும் கையாள்வதற்கான செயல்முறை ஒன்றை அவர்கள் உருவாக்கத் தொடங்கியிருக்கின்றார்கள் என்று நான் கருதுகின்றேன்.

இதனால், இதனை நிரந்தரமானதாகக் கொண்டு செல்வதற்கான சூழலை அவர்கள் ஏற்படுத்துவார்கள். அதற்கான வாய்ப்பு அதீதமாக இருக்கின்றது. ஆனால், இலங்கை அரசியல் நியமத்துக்கு உட்பட்ட வகையில் தமிழர்கள் ஒரு உரையாடலை இக்காலப் பகுதியில் முன்வைக்கின்ற போது, வடக்கை தனியான ஒரு அலகாக அடையாளப்படுத்தாமல் கிழக்கையும் உள்ளடக்கிய வகையில் இதற்கான இடைக்கால வரைபு ஒன்றுக்கான உரையாடலை முதன்மைப்படுத்துவது, அல்லது இவர்களால் அது தொடர்பான ஒரு முன்மொழிவை வைப்பது அடிப்படையில் ஆரோக்கியமானதாக இருக்கும்.




மாகாண சபைக் கட்டமைப்பு அல்லது அதற்கான தேர்தல் சாத்தியமற்றதாக இருக்கும் சூழலில் வடக்கு - கிழக்கை ஒரு தனித்துவமான அலகாக முன்மொழிவதற்கான வாய்ப்பு சாத்தியமானதாக இருந்தால், அதன் அதிகாரங்கள், அதன் உறுப்பினர்களின் நியமனம், தலையீடற்ற வகையில் அது செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் என பல விடயங்கள் இதில் விவாதிக்கப்படவும் முடிவுறுத்தப்படவும் வேண்டிய விடயங்களாக இருக்கும்.

ஆனால், தேர்தலை ஒத்திவைப்பதற்காக உருவாக்கப்படும் ஒன்றாக இது அமையும் என்பதை உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாது. மறுபுறம் இது ஒரு பலமானதாக – பொருளாதார ரீதியாக வலுவைக் கொடுக்கக்கூடிய, சமூக ரீதியாக பலத்தைக் கொடுக்கக்கூடிய வகையில் அதனைக் கையாளக்கூடிய தேவைப்பாடு தமிழ் அரசியல் சக்திகளுக்கு இருக்கின்றது. அந்த வகையில் இந்த விடயத்தை அணுகுதல் அவசியமானதென்றே நான் கருதுகின்றேன். இது ஒரு நீடித்ததாக இருக்கும் என்ற அச்சம் அனைத்துத் தரப்பிலும் உள்ளது. ஆனால், இது நீடித்து நிலைத்ததாக இருந்துவிடும் என்ற அச்சத்தின் காரணமாக இதற்கான வாய்ப்புக்களை இழத்தல் என்பது அது ஆளுநருடன் இணைக்கப்படுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம். அது இன்னும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றே நான் கருதுகின்றேன்.

**இவ்வாறு அமைக்கப்படும் இடைக்கால நிர்வாகத்துக்கு இருக்கக்கூடிய அல்லது இருக்க வேண்டிய அதிகாரங்கள் எவை?**

பொருளாதார ரீதியான தீர்மானங்களை எடுக்கின்ற தன்மை போன்றன அந்த சபைக்கு உரித்தானதாக இருக்க வேண்டும். அது அரசியல் கட்சிப் பிரமுகர்களை மட்டும் உள்ளடக்காது, அது பெருமளவுக்கு தகைமையுடைய விற்பன்னர்களைக் கொண்ட அதற்கே உரித்துடைய திறமையுடைய அந்தத் திறனைப் பிரயோகிக்கக்கூடிய வல்லமையுடைய சபையாக அது கட்டமைக்கப்படுகின்ற போது, அது ஒரு சமூக பொருளாதார வலிமை படைத்த கட்டமைப்பாக அது உருவாக்கப்படுவதற்கான வாய்ப்பு இருக்கும்.

இது புலம்பெயர்ந்த சமூகத்தில் இருக்கக்கூடியவர்களை உள்ளடக்கக்கூடிய அவர்களுடைய முதலீடுகளை பெறக்கூடிய எண்ணப்பாடுகளையும் முதன்மைப்படுத்த வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

இது முழுமையான ஒரு அரசியல் - பொருளாதார கட்டமைப்பையும் சமூகங்களின் தேவைகளைப் பரதிபலிக்கக்கூடிய அம்சங்களை உள்ளடக்கியதாக இந்த இடைக்கால வரைபு என்பது கட்டமைக்கப்பட வேண்டிய ஒரு தேவைப்பாடு இருக்கின்றது.

மிக ஆழமாக உரையாடப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், வடக்கு கிழக்கு மக்களுடைய பொருளாதாரத் தேவைகளையும் உட்கட்டமைப்பு மாற்றங்களையும் செய்யக்கூடிய வகையில் அதன் அதிகாரங்கள் கட்டமைக்கப்பட வேண்டும். அதனூடாகத்தான் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி சார்ந்த விடயங்கள் எல்லாவற்றையும் நிர்வகிக்கக்கூடிய அதிகார எல்லைகளை உள்ளடக்கியதாக இது இருக்க வேண்டும். அதற்கான செய்முறை ஒன்று வரைபாக உள்ளடக்கப்பட வேண்டும். முழுமையாக தென்னிலங்கை அரசியலுக்குள் இதனுடைய செயற்பாட்டை ஒப்படைக்காமல் - அவற்றின் செல்நெறி ஒவ்வொன்றையும் வகுக்கும் போது வடக்கு கிழக்கு சார்ந்த விதத்தில் அதற்குரிய பெறுமானங்களைக் கொடுக்க வேண்டிய

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# சா(தி)தீ...

# தமிழ்த்தேசியத்தின் சாபக்கேடு!

## பகுதி 1

பா.அரியநேத்திரன்

1957 யூலை மாதம் மட்டக்களப்பில் தந்தை செல்வா தலைமையில் நடந்த இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி மகாநாட்டில் யாழ்ப்பாணத்தில் பல் நெடுங்காலமாக பேணிவந்த சாதி முறைக்கு எதிராக முதன்முதலாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பது வரலாற்று உண்மை.

**ஒரு மனிதனை இன்னொரு மனிதன் சமமாக கருதாமை தீண்டாமை எனப்படும்**

கிடப்பில் கிடந்த சாதி பிரிவினையை தூசி தட்டி தமிழ் மக்கள் கூட்டணி தலைவரும் முன்னாள் வடமாகாண முதலைமைச்சரும், ஓய்வுநிலை நீதியரசருமான சி.வி.விக்கினேஷ்வரன் மீண்டும் கிளறிவிட்ட விவகாரம் தமிழ்தேசிய அரசியல் பரப்பில் பல விமர்சனங்களை தோற்று வித்துள்ளது. அவரின் கருத்துக்கு பல்வேறுபட்ட தரப்பினர் விமர்சனங்களை முன்வைத்த நிலையில்



கடந்த 01/06/2023,ல் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன் சாதியை அறிந்து கொள்ள மின்னஞ்சல் அனுப்பியதாக எழுந்த சர்ச்சை தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

அந்த விளக்கத்தில் தமிழ் மக்கள் வாழ்வில் அதுவும் வடமாகாணத் தமிழ்மக்கள் வாழ்வில் சாதீய வேற்றுமைகள் இன்றும் நிலவுகின்றன. ஆனால் அது வெளிப்படையாகப் பேசப்படுவதில்லை.

குறிப்பிட்ட சூழலில் பிறந்து வளர்ந்தவர்கள் அதுபற்றிய போதிய அறிவைப் பெற்றிருப்பார்கள். அவ்வாறான சூழலில் இருந்து விடுபட்டு வாழ்ந்த ஒருவருக்கு அதன் தாற்பரியம் விளங்காது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்

கொழும்பில் பிறந்து வளர்ந்த எனக்கு சாதிபற்றி எதுவும் தெரியாது இருந்தது. அதனால்தான் இன்றும் எவரையும் "நீங்கள்" என்று பன்மையில் விளித்து வருகிறேன். நண்பர்களுக்கிடையேயும் மிகவும் கிட்டிய உறவுகளுக்கிடையேயும் தான் நான் "நீ " என்ற ஒருமையை பாவித்து வருகின்றேன். எவரையும் மனிதர்களாக மதித்து வாழ்ந்து வருகின்றேன்.

எங்கள் தாய் தந்தையரை அவர்களின் பாரம்பரியத்தை நாங்கள் மாற்ற முடியாது. ஆனால் வெவ்வேறு சமூகத்தில் பிறந்தவர்கள் சகோதரத்துவத்துடன் வாழலாம். திரு. அருந்தவபாலனுடனும் திரு. ஐங்கரநேசனுடனும் அவர்களின் சிறப்பியல்புகளைக் கண்டு அவற்றின் அடிப்படையிலேயே அவர்களை மதித்து நட்பு பாராட்டி வந்தேன். அவர்களின் சாதிகள் பற்றி எனக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை. தெரிந்து கொளள வேண்டிய அவசியமும் எனக்கு இருந்ததில்லை.

இங்கு பிறந்து வளர்ந்தவர்களிற்கு பல காரணங்களின் நிமித்தம் ஒருவரின் சாதி பற்றிப் போதுமானதாகத் தெரிந்திருக்கின்றது. ஆனால் எனக்கு அவ்வாறு இல்லை. தெரியாததை தெரிந்து கொள்ள முற்பட்டதால்தான் உங்களின் வசைமொழிக்கு ஆளாகியுள்ளேன்.

சாதி வேற்றுமைகளை நான் என்றும் பாராட்டியதில்லை. அதுபற்றிக்குப் போதிய அறிவும் இல்லை. ஆனால் எமது குடும்ப பாரம்பரியம் பற்றி பெற்றோர்களாலும் மற்றோர்களாலும் கூறப்பட்டது. அவற்றை வரலாறு படிப்பது போல் உள்வாங்கினேன்.

முதலமைச்சராக இருந்தபோது தகைமை அடிப்படையிலேயே பொறுப்புக்களைப் பல்வேறு தரப்பினருக்கும் ஒப்படைத்தேனே தவிர அவர்களின் சாதி பார்த்தல்ல.

மனிதநேயம், மனிதாபிமானம், மனித உரிமைகளைப் பாதுகாக்க விளையும் மனம் என்பன எமது மனிதத்துவ சிந்தனையில் இருந்து வெளிவருவன. வாக்குகள் எடுக்க, நிதி சேகரிக்க பொய்யான மனிதத்துவத்தை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் எனக்கு எப்பொழுதும் இருந்ததில்லை. என் மாணவர்களைக் கூட சமமாகவே மதித்து நட்பு பாராட்டி வந்துள்ளேன். உங்கள் மீது நட்பு பாராட்டுகின்றேன் என்றால் நீங்கள் எமக்கு செய்த உதவிகளை சேவைகளை நான் மறக்கவில்லை என்பதே அர்த்தம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் சாதி யாழ்ப்பாண மக்களின் பொருளாதாரசமூக, சமய வாழ்க்கையில் சாதிமுறை முக்கிய பங்கினைப் பெற்றிருந்தது. அங்கு சாதிப் பிரிவுகள் பலவாக இருந்தன. உயர் சாதியென வேளாளர் முக்கிய வகிபாகத்தை பெற்றிருந்தனர். கோவியர், பள்ளர், நளவர் என்பன அடிமைச் சாதிகள் எனவும், அம்பட்டர், வண்ணார், கொல்லர், தச்சர், பறையர் ஆகியன குடிமைச்சாதிகள் எனவும் அன்று கருதப்பட்டன.



**போத்துகீசர், டச்சுக்காரர்காலம் (1505 – 1796)**

போத்துக்கீசரும், டச்சுக்காரரும் யாழ்ப்பாண மக்களின் சாதி முறைமையிலும் வழக்கங்களிலும் தலையிடவில்லை. குறிப்பாக, டச்சுக்காரர் ஆட்சியில் சாதிமுறை யாழ்ப்பாணத்தில் பலபடித்தரங்கள் கொண்டதாய் இறுக்கமடைந்தது.

**பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்ப காலம்**

பிரித்தானியர் சாதிமுறையை தொடர அனுமதிப்பதுதான் மக்களைத் திருப்திப்படுத்துவதற்கு புத்தியான வழி எனக் கண்டனர். அவர்கள் இயற்றிய சட்டப் பிரமாணங்களும் உயர் சாதியினரின் நலன்களைப் பாதுகாப்பதில் தீவிரம் காட்டினர். சாதிமுறையை நிலைபெறச் செய்ய உதவின. பிரித்தானியர் ஆட்சியின் தொடக்கக் காலத்தில் தாழ்ந்த சாதியினர் கலகம் செய்தபோது பிரித்தானியர் சட்டங்களை இயற்றி அவர்களைக் கட்டுப்படுத்தினர். உயர்சாதியினருக்குப் பணிந்து போகும்படி கேட்டுக் கொண்டனர். 1806ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கக் கட்டளைச்சட்டம் பின் வருமாறு விதித்தது.



தாழ்ந்த சாதிகளைச் சேர்ந்த யாவரும் உயர் சாதியினர் எல்லோருக்கும் பண்டைய வழக்கங்களின்படி அவர்களுக்கு உரிய மரியாதைகளை கொடுக்க வேண்டும். கோவியர், நளவர், பள்ளர் ஆகிய பிரிவினர்க்கும் உயர்சாதியினருக்கும் உரிமைகள், சலுகைகள் தொடர்பாக எழும் பிரச்சினைகள் பிணக்குகள் என்பன இம்மாகாணங்களில் இருந்து வரும் வழக்கங்கள், நடைமுறைகளுக்கு ஏற்பவே தீர்மானிக்கப்படும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் சாதிப் பிரச்சினை மிகத் தெளிவாக வெளிப்பட்டது. படித்த முற்போக்குச் சிந்தனையுடைய உயர்சாதி இந்துக்கள் சிலரும், தாழ்ந்த சாதியினர் எனப்படுவோரும் சாதிய நடைமுறைகளையும், அதன் தீங்கான அம்சங்களையும் ஒழிக்க வேண்டும் என்று முயற்சித்ததைக் காண்கிறோம்.

ஒடுக்கப்பட்டோர் சமத்துவ உரிமைகளையும் சலுகைகளையும் கோரி நின்றனர். மரணச் சடங்கின் போது மேளமடித்தல், பாடசாலைகளில் தம் பிள்ளைகளிற்குச் சம ஆசனம், கோயில்களில் உள்மண்டபத்திற்குள் சென்று வழிபடுதல், நவீன பாணி உடைகளை அணிந்து கொள்ளுதல் ஆகிய உரிமைகளை அவர்கள் கோரிநின்றனர்.

**கலகங்கள்**

மேற்குறித்த விடயங்கள்சார்ந்த பிணக்குகள் வேளாளர்களுக்கும் சாதிப் படிநிலையில் கீழ்ப்பட்டவர்களுக்கும் இடையிலான கலகங்களாக வெடித்தன. 1914 ஆம் ஆண்டில் பண்டத்தரிப்பில் தச்சர்களுக்கும் வேளாளாருக்கும் இடையில் கலகம் மூண்டது. இதே ஆண்டில் தன்னக்காரக்குறிச்சியில்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# "எங்களை வாழவிடுங்கள் அல்லது எங்களை கொன்றுவிடுங்கள்"

மட்டு.நகரான்

எங்களை வாழவிடுங்கள் அல்லது எங்களை கொன்றுவிடுங்கள்' இந்த குரல் யுத்த காலத்தில் வெளிவந்த குரல்கள் அல்ல. இது யுத்தம் மௌனிக்கப்பட்டு 14வருடங்களுக்கு பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வெளிவந்த குரலாகும். இவ்வாறான குரல்கள் பல ஆண்டுகளாக ஒலித்துக்கொண்டுதான் இருக் கின்றது. ஆனால் இந்த குரல்களை செவிமடுக்கவும் அவர்களின் பிரச்சினைகளை தீர்த்துவைக்கவும் யாருமற்ற நிலைமையே மட்டக்களப்பில் உள்ள பல பிரதேசங்களின் தமிழ் மக்களின் நிலை மையாகவுள்ளது.

கிழக்கு மாகாணம் தொடர்ச்சியான பாரியளவிலான பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது. வெறுமனே நாங்கள் தமிழ் தேசிய அரசியலை முன்நகர்த்துவதில் காட்டும் அரசியல் ரீதியான நடவடிக்கைகளை தமிழ் தேசிய அரசியலில் உள்ள மக்களின் நிலைமையினை கண்டறிவதற்கு தவறிவருகின்றோம்.

தமிழ் தேசிய விடுதலையின் ஆயுதப் போராட்டத்தில் கிழக்கு மாகாண போராளிகளின் பங்களிப்பு என்பது கணிசமானதாகவேயிருந்தது. வடக்கானாலும் கிழக்கானாலும் ஆயுதப் போரின் வெற்றியில் கிழக்கு மாகாண போராளிகளின் போராட்ட திறனை யாரும் குறைத்துமதிப்பிட முடியாது. அதேபோன்று இழப்புகளும் கிழக்கு மாகாணத்திற்கு அதிகளவில் இருந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது.



இவ்வாறான நிலையில் இந்த ஆயுத விடுதலைப்போராட்டத்தில் படுவான்கரையில் உள்ள மக்கள் பெருமளவான அர்ப் பணிப்புகளை செய்திருக்கின்றார்கள். அந்த அர்ப்பணிப்புக்கான உரிய கௌரவம் இன்று வழங்கப்படுவதில்லையென்ற கவலை தமிழ் தேசியத்தினை ஆதரிக்கும் அனைத்து கிழக்கு தமிழ் மக்கள் மத்தியிலும் இன்றும் இருந்துவருகின்றது.

இன்று தமிழ் தேசிய அரசியலை வைத்து வயிறு வளர்ப்பவர்களும் அதனை வைத்து வைத்து வயிறு வளர்த்தவர்களும் சுகபோகங்களை அனுபவித்துவரும் நிலையில் அந்த தமிழ் தேசியத்திற்காக போராடியவர்களும் அந்த போராட்டத்திற்கு அரணாக இருந்த மக்களும் ஏதிலிகளாக வாழும் நிலைமையினையே இன்று நாங்கள் காணமுடிகின்றது.

தமிழ் தேசியத்தினை தமது மூச்சாக கொண்ட மக்கள் தொடர்ச்சியாக புறக்கணிக்கப் படும்போது அவர்கள் மத்தியில் ஏற்படும் விரக்திநிலையே மாற்று கட்சிகளை நோக்கி நகரவைக்கின்றது. இதுவரையில் இது தமிழ் தேசிய பரப்பில் அரசியல் செய்யும் சக்திகளுக்கு புரியாமல் இருப்பது கவலையான விடயமாகவே பார்க்கவேண்டியுள்ளது.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பகுதியாக காணப்படும் செங்கலடி-பதுளை வீதியில் உள்ள மக்கள் செங்கலடி நகரில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு - ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட செங்கலடி-பதுளை வீதியில் உள்ள கித்துள் வெலிக்காண்டி, உறுகாமம், கரடியனாறு, புல்லுமலை, மாவளையாறு உட்பட 10க்கும் மேற்பட்ட கிராம மக்கள் இணைந்து இதனை முன்னெடுத்தனர்.

செங்கலடி-பதுளை வீதியில் உள்ள தமிழ் மக்களைப்பொறுத்த வரையில் கடந்த காலத்தில் தமிழ் தேசிய விடுதலைப்போராட்டத்திற்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்களாக வேயிருந்தனர். இங்குள்ள பெரும்பாலான மக்கள் சிங்கள இனவாதத்தின் உச்சத்தினால் மலையப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதிகளில் குடியேறி அப்பகுதிகளை பாதுகாத்துவந்த மக்களாகும்.

போராட்டத்தில் இவர்களின் பிள்ளைகளின் பங்களிப்பு என்பது பெரியளவிலிருந்துவந்தது. ஆனால் இன்று இந்த மக்கள் கவனிப்பார் அற்றவர் களாகவேயிருந்துவருகின்றனர்.

இப்பகுதி மக்கள் தொடர்ச்சியான பிரச்சினைகளுக்கு காலம்காலமாக ஆளாகி வருகின்றனர். இப்பகுதியில் உள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, சேனைப்பயிர்ச்செய்கை போன்ற வாழ் வாதார தொழில்களிலேயே ஈடுபட்டுவருகின்றனர்.

இப்பகுதியை சேர்ந்த மக்களின் அடிப் படை தேவைகள் என்பது யுத்தம் நிறைவடைந்து 14வருடங்களைக்கடந்தும் பூர்த்திசெய்யப்படாத நிலையில் மிகவும் கஸ்டமான சூழ்நிலையி லேயே தமது வாழ்வாதாரத்தினை முன் னெடுத்துவருகின்றனர்.

இந்த நிலையில் இப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக காட்டுயானையின் தாக்குதல் களினால் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதற்கு தீர்வினைப்பெற்றுத்தருமாறு பல்வேறு தடவைகள் பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கைகளை முன்வைத்தபோதிலும் இதுவரையில் கவனம் செலுத்தாத நிலையிலேயே அப்பகுதியினை சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப் பற்று பிரதேசத்தின் எல்லைப்பகுதிகளாக கருதப்படும் இப்பகுதியில் 95வீதமான மக்கள் தமிழர்களாகவுள்ள நிலையில் இப்பகுதியில் காட்டுயானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்துக்காணப்படுவதாக இதன்போது ஆர்ப் பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் தெரிவித்தனர்.

'எல்லைப்பகுதியான எங்களுக்கு எந்த உதவியும் இல்லை. ஓலைக்குடிசையில் எங்களது பிள்ளைகளை வைத்துக்கொண்டு மின்சாரம் இல்லாத நிலையில் மிகவும் கஸ்டத்துடன் வாழ்கின்றோம். இவ்வாறான நிலையில் காட்டு யானைகளினால் அச்சுறுத்தல்கள் தொடர்ந்து இருந்துவருகின்றது. இரவு வேளைகளில் உயிரை கையில் பிடித்தே கழித்துவருகின்றோம். எங்களது பிள்ளைகளை பாதுகாக்க நாங்கள் இரவு பகலாக கஸ்டப்படுகின்றோம்.



யானைகள் புகுந்தால் இலகுவில் எங்களது வீடுகளை அழித்துவிடுகின்றது. பிள்ளைகளை அடித்துக்கொல்கின்றது. எங்களது நிலைமை ஏனைய பகுதியில் வாழும் அதிகாரிகளுக்கும் விளங்குவதில்லை, அரசியல்வாதிகளுக்கும் விளங்குவதில்லையென' புல்லுமலை பகுதியை சேர்ந்த மாரிமுத்து என்ற பெண் தெரிவித்தார்.

'நாங்கள் விவசாயத்தினையும் சேனை பயிர்ச்செய்கையினையும் நம்பியே வாழ்கின்றோம். நெல் இல்லாவிட்டால் உணவு உண்ணமுடியாது. விவசாயத்தை காட்டு யானைகள் அழிக்கின்றன. வயல் நிலங்களை காட்டு யானைகள் அழிக்கின்றது அவற்றிலிருந்து பாதுகாக்க காவலாளிகளை நியமித்தால் அவர் காவல் செய்யும்வாடியை உடைக்கின்றது, அவரையும் தாக்கி கொல்கின்றது. நாங்கள் தினமும் யானைகளுடன் போராடியே எமது உயிர்களை பாதுகாத்துவருகின்றோம்' என இங்கு கருத்து தெரிவித்த நடராஜா என்னும் விவசாயி தெரிவிக்கின்றார்.

இதேபோன்று புல்லுமலை மறு மலர்ச்சி பெண்கள் அமைப்பின் தலைவி சுலோஜினி கருத்து தெரிவிக்கையில், நாங்கள் இப்பகுதியில் தொடர்ச்சியாக காட்டு யானை களின் அச்சுறுத்தல்களுக்கு எதிராக போராடிவருகி ன்றோம். எங்களது பகுதியானது மட்டக்களப்பின் எல்லைப்பகுதியாக காணப்படுகின்றது. இதன் காரணமாக இங்குள்ள தமிழ் மக்கள் தமது எல்லைகளை பாதுகாக்கவேண்டும் என்பதற் காகவே இவ்வளவு கஸ்டங்களையும் தாங்கி வாழ்கின்றனர். இங்குள்ள பிள்ளைகள் பாட சாலைக்கு செல்லமுடியாத நிலைமையும் காணப்படுகின்றது. பாடசாலைசெல்லும் பிள்ளை உயிரோட வீடு வந்துசேருமா என்கின்ற நிலைமை யும் காணப்படுகின்றது.

யுத்த காலத்தில் இந்த பிரச்சினையிருக் கவில்லை. யுத்தம் முடிஞ்சபின்னர்தான் இந்த யானை பிரச்சினை இருக்கின்றது. இங்கு மக் களுக்கு அச்சுறுத்தலாகயிருக்கும் யானைகள் சிங்கள பகுதிகளிலிருந்து இங்குகொண்டுவந்து விடப்பட்டுள்ளன. எங்கள் மீது யானைகள் ஏவிவிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் யாரும் கவனம் செலுத்துவதாகயில்லை.

நாங்கள் அதிகாரிகள் தொடக்கம் அரசியல் வாதிகள் வரையில் பலரிடம் இந்த பிரச்சினைகளை கொண்டுசென்றபோதிலும் இதுவரையில் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இங்குள்ள யானைகள் இங்கிருந்து அப்புறப் படுத்தப்படவேண்டும். எங்களுக்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படவேண்டும். எமது பகுதி கள் பாதுகாக்கப்படவேண்டுமானால் நாங்கள் அச்சமின்றிய சூழலில் வாழ்வதற்கான சூழல் ஏற்படுத்தப்படவேண்டும் என்று கூறினார்.

உண்மையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் என்ன நோக்கத்திற்காக நடைபெற் றதோ அந்த நோக்கம் இன்று மழுங்கடிக்கப்படு கின்றது. ஆனால் சிங்கள தேசம் எமது மண்ணை அபகரிப்பதற்கு முன்னெடுக்கும் செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது. நாங்கள் இன்னும் வேடிக்கைபார்க்கும் நிலைமையில்தான் இருக்கின் றோம்.

நாங்கள் வெறுமனே தமிழ் தேசியத்தை மட்டும் கதைத்து அரசியல்செய்வதனால் மட் டும் அதனை அடையமுடியாது. இவ்வாறான எல்லைப்பகுதிகள் பாதுகாக்கப்படவேண்டும். அதற்கு அனைத்து தரப்பினரும் இணைந்து பணியாற்றமுன்வரவேண்டும் என்பதே எமது எதிர் பார்ப்பாகும்.

• • •

# பொருளாதார நெருக்கடி நிலையால் கொழும்பு மத்தி வீதியோர வியாபாரிகளின் அவல நிலை

## பகுதி 1

ஹஸ்பர் ஏ ஹலீம்

கொழும்பில் மிகவும் வண்ணமயமான துடிப்பான காட்சிகளில் ஒன்று பெட்டா சந்தைப் பகுதியின் நிரம்பிய தெருக்கள் ஆகும், அங்குள்ள வீதியோரங்களில் பழங்கள், பொம்மைகள், ஆடைகள் மற்றும் அழகுசாதனப் பொருட்களை விற்கும் கடை களாி நிரம்பியுள்ளன. இரவும் பகலும்,பொருட்களை அங்கும் இங்கும் கொண்டு செல்கிறார்கள். வாடிக்கையாளர்களால் நிரம்பியிருக்கும் இந்த நெரிசலான தெருக்கள், பார்வையாளர்களுக்கு ஒரு பரபரப்பான வர்த்தகத்தின் தோற்றத்தை அளிக்கிறது. உண்மையில், நிலவும் பொருளாதார நெருக்கடியாலும், அதிகாரிகளிடமிருந்து வரும் துன்புறுத்தல்கள் குறித்தும் தொடர்ந்து கவலை யுடன் தாங்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரு வோர வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதன் உண்மை நிலையை அறிய கொழும்பின் வீதியோர வியாபாரிகளுடன் ஒரு நாள் செலவிட்டோம்.



'கடந்த காலங்களை போல் அல்லாது வியாபாரம் இப்போதைக்கு ரொம்ப கஷ்டம் இந்த சிறிய பூக்கடையை வைத்தே காலத்தை ஓட்ட வேண்டியுள்ளது இப்போதைய உழைப்பு போதாது கூலி வீட்டில் மூன்று பாடசாலை செல்லும் பிள்ளைகளை வைத்து கணவனை இழந்த நிலையில் வாழ்ந்து வருகிறேன். அத்தியாவசிய பொருட்கள் விலை அதிகம், கடன் சுமை, நகை வங்கியில் இது இவ்வாறு இருக்க மின்சார, நீர் கட்டணம் அதிகரிப்பு போன்றன எம்மை வாட்டி வதைக்கிறது பூ மாலை ஒன்று 200 ரூபா விற்கிறேன் ஆனால் 150 ரூபா சொன்னாலும் கூட வாங்குவார் இல்லை' என கொழும்பு மத்திய பகுதியின் பூக்கடை வியாபாரத்தில் ஈடுபடும் பெண் தலைமை தாங்கும் பெண்மணியான சர்வேஸ்வரி தெரிவித்தார்.



'இந்த பூக்கடையில் உள்ள மாலையை பேருந்தில் ஏறி இறங்கி விற்று அதில் வரும் வருமானத்தை கொண்டே வீட்டில் சமைப்பதற்கு தேவையான பொருட்களை வாங்க முடியும் ஆனால் தற்காலத்தில் வருமானம் போதாது வியாபாரமும் குறைவு ' என சிறிய பூக்கடை கார வயோதிபர் கிருஷ்ணா தெரிவித்தார்.



'கடுமையான வெயிலில் இந்த வியா பாரத்தை செய்து வருகிறேன் இரண்டு பிள்ளைகள் உள்ளார்கள் கடன் வாங்கியே இந்த பழக் கடை வியாபாரத்தை செய்து வந்தாலும் சரியான நஷ்டம் ஏற்பட்டுள்ளதுடன் வியாபாரம் குறைவு ரொம்ப கவலையுடன் வாழ்வாதாரத்தை மேற் கொண்டு வருகிறேன் எனது மனைவி வீட்டு பணிப்பெண்ணாகவே உள்ளார்' என அப்பிள், ஒரேன்ஜ் வீதியோர பழக்கடை வியாபாரியான இதயராஜா தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். குறித்த வியாபாரியிடம் இலாப செலவு விபரத்தை அறிய முற்பட்ட போதும் அதனை அவர் மறுத்திருந்தார்.



'சாமான் பொருட்களின் விலை அதிகம் இப்போதைக்கு எனக்கு ஒரு நாளைக்கு 1500 ரூபாவே வருமானம் குடும்பத்தில் மொத்தமாக 05 நபர்கள் உள்ளோம் இது வயிற்றுப் பசிக்கு போதாது விரும்பிய பொருட்களையோ எது வுமே வாங்க முடியாது. கடும் வெயிலில் வியா பாரத்தை நடாத்திச் செல்கிறோம்' என சிறிய வகை விளையாட்டு பொருட்கள் செய்யும் வியாபாரியான ரகுமான் தனது வீதியோர வியாபார நிலை பற்றியும் பொருளாதார சுமை தொடர்பிலும் வெளிப்படுத்தினார்



கொழும்பு நகர் வியாபார பகுதியின் நிலைமை தொடர்பில் கொழும்பு பல்கலைக் கழகத்தின் பொருளியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி கோ.அமிர்தலிங்கம் அவர் களிடம் வினவிய போது "பணவீக்கம் 73%இல் இருந்து 53% ஆகக் குறைவடைந்துள்ள போதும் பொருட்களின் விலை இன்னும் அதிகமாகவே உள்ளது.

தற்போது கொள்வனவு வீழ்ச்சி கண்டுள்ளது எரிபொருள் தட்டுப்பாடு பற்றாக் குறை நீங்கினாலும் மக்களின் வருமானம் அதிகரிக்கவில்லை 2019ல் வறுமை ஏற்பட்ட நிலையில் மக்களுடைய வாழ்வாதாரத்தில் அது திருப்திகரமாக அமையவில்லை தற்போது முறைசார் துறைகளாக அரச தனியார் துறை காணப்பட்டாலும் முறை சாரா துறையாக இருக்கின்ற அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டு செல்லும் மக்களுடைய வாழ்க்கையில் விடிவு கிட்டவில்லை புத்தாண்டில் மக்களுடைய பொருட்கொள்வனவு குறைவாகவே உள்ளது கொழும்பு நகர் பகுதி வர்த்தகத்தோடு தொடர்ந்தும் காணப்படுகிறது இங்கு விவசாயமோ வேறு வகையான நிலமைகளோ இல்லை நிர்மாணத் துறை தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டு சில துறைகள்வழமைக்கு பொருளாதாரரீதியில் திரும்பி வருகின்றன. தொழில் வாய்ப்பில் பிரச்சினை உள்ளபடியால் மக்களுடைய வருமானத்தில் மாற்ற மில்லை இதனால் வருமானமட்டல் ரீதியான பிரச்சினை உள்ளது

எப்படித்தான் தங்களது வாழ்வாதாரத்தை முன்னேற்ற நினைத்தாலும் தொடர்ந்தும் இவ்வாறான வீதியோர வர்த்தக முறை மூலமே இலாபமீட்ட முடியும். இதனை நிரந்தரமான தொழிலாக கருதினாலும் கொழும்பு புறக் கோட்டை பகுதியானது 1ம்இ2ம் குறுக்குத் தெரு மற்றும் அதனை அண்டிய பகுதிகள் வீதியோர வியாபாரமாகவும் நடைபாதை வியாபார நிலை யமாகவுமே காட்சியளிக்கிறது இந்த வர்த்தக நிலை மாலை சுமாராக 7 மணிக்குப் பிறகு மூடப் படுவதனை அவதானிக்க முடிகிறது. தமிழ், சிங்கள நோன்பு பெருநாள் கலை கட்டியபோதும் மக்களிடத்தில் பணமில்லை மக்களிடத்தில் பணம் இருந்தால் தான் விரும்பிய பொருட்களை கொள்வனவு செய்வார்கள் என்பதை நன்கு தெரிந்து கொள்ளக்கூடிய நிலை உள்ளது.

சிறிய ரக அளவிலான பொருள் விற் பனையே இடம் பெற்று வருகின்றன. பழவகை, விளையாட்டு பொருட்கள், ஆடை அடிகலன்கள், உற்பத்தி பொருட்கள் என பல வகையான பொருள் விற்பனை இவ் வீதியோர பகுதியில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கொழும்பு மத்திய பகுதியானது வர்த்தக ரீதியான தளத்தை கொண்ட ஒரு பகுதியாக அமையப் பெற்றுள்ளது. 'அச்சாறு வியாபாரம் செய்து வருகிறேன் ஆனாலும் மக்களிடத்தில் காசு இல்லை பொருட்களும் விலை அதிகம் மக்களிடத்தில் காசு இருந்தால் தான் அவர்களும் எங்களிடத்தில் வாங்குவார்கள் இப்போதைக்கு கஷ்டம் வியாபாரம் குறைவு சகல பொருட்களும் செமையான விலை அது மட்டுமன்றி இதனை தொடர்ந்தும் முன்னெடுப்பது என்பது இயலாத நிலையாக உள்ளது அன்றாட வருமான வழி குறைவு இருப்பதை கொண்டு ஓரளவு குடும்ப வாழ்க்கையினை கொண்டு செல்கிறோம் .

வீதியில் வியாபாரம் செய்வதென்பது நிரந்த ரமாக செய்ய முடியாது சிலவேளை பொலிஸார் தடை விதிக்கின்றனர் இவ்வாறாக வியாபாரத்தை கொண்டு செல்வது பல இன்னல்களை சந்தித்தே ஆக வேண்டும்' என பல வகையான பழவகைகளை கொண்டு அச்சாரு உற்பத்தி வியாபாரியான இம் தியாஸ் தெரிவித்தார்.

அதிகமான சனநெரிசல் வியாபார நிலைமையில் பல இடர்பாடுகளை கொண்ட

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# பலப்படுத்த வேண்டிய தொழிற்சங்க கட்டமைப்பு

துரைசாமி நடராஜா

ஒரு சமூகம் பல்வேறு துறைகளிலும் மேலெழும்புவதற்கும், உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் ஐக்கியம் முக்கியமானதாக விளங்குகின்றது.பல மட்டங்களிலும் எதிரொலிக்கும் ஐக்கியமானது சாதக விளைவுகளுக்கு அடித்தளமாக அமையும்.இந்த வகையில் மலையக சமூகத்தின் எழுச்சியில் ஐக்கியமின்மை தாக்கம் செலுத்துவதாக பலரும் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றமை தெரிந்ததாகும்.இதில் குறிப்பாக அரசியல், தொழிற்சங்கவாதிகளின் ஐக்கியமற்ற செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாகவே விமர்சனங்கள் இருந்து வருகின்றன.இதனிடையே தற்போது மலையக அரசியல், தொழிற்சங்கவாதிகள் பேதங்களை மறந்து மக்களின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு குரல்கொடுக்கப் போவதாக தெரிவித்துள்ளமை ஒரு வரவேற்கத்தக்க விடயமாக பலராலும் பேசப்பட்டு வருகின்றது.இந்த நல்ல சகுனம் தொடர்ந்தும் நிலைபெற வேண்டும் என்பதே பலரினதும் எதிர்பார்ப்பாகும்.

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து இவ்வருடத்துடன் 200 வருடங்கள் பூர்த்தியாகின்றமை ஒரு முக்கிய விடயமாகும்.இந்தியாவில் ஏற்பட்ட பஞ்சம் உள்ளிட்ட பல காரணிகள் இம்மக்களின் இடப்பெயர்வுக்கு பிரதான காரணமாக அமைந்தன.1876 - 78 இல் ஏற்பட்ட பஞ்சம் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே மிகவும் கொடியதாக பலராலும் மதிப்பிடப்பட்டுள்ளது.இப்பஞ்சத்தால் தஞ்சாவூர் மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டது.சுமார் 40 இலட்சம் பேர் வரை பஞ்சத்தால் உயிரிழந்ததாக தகவல்கள் வலியுறுத்துகின்றன.சராசரியாக ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் பேருக்கு 22 மாதங்களுக்கு நாளாந்த பஞ்ச நிவாரணம் வழங்க வேண்டிய நிலை உருவானது.பஞ்சம் மக்கள் தொகை அதிகரிப்பு வீதத்தை குறைத்தது.இப்பஞ்சத்தால் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களின் தொகையைக் காட்டிலும் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்தவர்களின் தொகை மிகவும் அதிகமாகுமென்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.இந்தியாவின் தமிழகத்தில் இருந்து பல்வேறு காரணங்களால் உலகின் பல நாடுகளுக்கும் தீவுகளுக்கும் இடம்பெயர்ந்தவர்கள் எதிர்நோக்கிய துன்ப துயரங்கள் சொல்லிலடங்காது.

பலவிதமான சுரண்டல் களுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளான இவர்கள் அடிமைகளைப்போல் நடாத்தப்பட்ட வரலாறு மிகவும் துன்பகரமானதாகும்.தமிழகத்தில் இருந்து அழைத்துவரப்பட்டு வெளிநாடுகளிலும், தீவுகளிலும் குடியேற்றப்பட்ட தமிழ்த் தொழிலாளர்களில் பலர் இன்று தமிழ் பேசவோ, எழுதவோ தெரியாத நிலையிலேயே வாழ்ந்து வருவதோடு அதிகளவில் சுதேச இனத்தவர்களுடன் கலப்புற்று விட்டதாக வும் கலாநிதி அருணாசலம் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.மேலும் அவ்வாறு கலப்புற்ற நிலையில் அவர்கள் பெருமளவு உரிமைகளுடனும் சலுகைகளுடனும் ஓரளவு வளத்துடனும் வாழ்ந்து வருகின்றனர்.தொழிலாளர்களில் கணிசமானவர்களின் இளந்தலைமுறையினர் கல்வி கற்று பிற வேலை வாய்ப்புக்களைப் பெற்று முன்னேறத் தொடங்கியுள்ளனர் என்பதும் அவரின் கருத்தாகவுள்ளது.இந்நிலையில் இலங்கை வாழ் மலையக மக்கள் தொடர்பில் நாம் நோக்குகையில் அம்மக்கள் இன்னும் அடிப்படை தேவைகள் கூட பூர்த்தி செய்யப்படாத நிலையில் மிகவும் இக்கட்டான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றமை தெரிந்ததாகும்.இதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது.குடியிருப்பு, சமூக நிலைமைகள், தொழில்வாய்ப்பு, பொருளாதாரம், கல்வி என்று சகல துறைகளிலும் இம்மக்கள் பின்தங்கிய நிலைமையினையே கொண்டுள்ளனர்.



இம்மக்களின் அபிவிருத்தி கருதி அரசியல் தொழிற்சங்கவாதிகள் குரல் கொடுத்து வருகின்றபோதும் உரிய சாதக விளைவுகள் இன்னும் எட்டப்படவில்லை.ஆட்சியாளர்கள் இம்மக்களின் வாக்குகளின் மீது காட்டும் அக்கறையை இம்மக்களுக்கு உரிய சேவைகளை பெற்றுக் கொடுப்பதில் காண்பிக்கவில்லை என்பது வருந்தத்தக்க விடயமாகும்..

"யானைப்பசிக்கு சோளப்பொறி" என்ற ரீதியில் அவ்வப்போது சிற்சில உதவிகள் இம்மக்களுக்காக வழங்கப்படுகின்றதே தவிர இதயசுத்தியுடன் இம்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க ஆட்சியாளர்கள் முன்வருவதில்லை என்பது கசப்பான உண்மையாகும்.பெரும்பான்மை அரசியல்வாதிகள் கூட ஆட்சியாளர்களின் இந்த ஓரவஞ்சனையையும், நியாயமற்ற தன்மையையும் கண்டித்துப் பேசி வருகின்றனர். "இலங்கையர்" என்ற பொதுவரையறைக்குள் மலையக மக்கள் நோக்கப்படாது இனத்தை முன்னிலைப்படுத்தி ஓரங்கட்டப்பட்டு வருவதாக கண்டனக் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. இனவாத சிந்தனையாளர்கள் இந்நாட்டை குட்டிச்சுவராக்கிய வரலாறு கொடுமையானது. இதனால் ஏற்பட்ட தழும்புகள் இன்னும் ஓய்ந்தபாடில்லை.சர்வதேசத்தின் மத்தியில் இதனால் தலைகுனியும் நிலைமையும் ஏற்பட்டது.. நிலைமை இவ்வாறிருக்கையில் இனவாதிகள் இன்னும் திருந்தியதாக இல்லை.நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இனவாதம் சிறுபான்மை மக்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இடையூறாக உள்ளது.இந்த வகையில் மலையக மக்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இத்தகைய இனவாதப் போக்குகளும் தடைக்கல்லாக உள்ளன என்பதனை மறுப்பதற்கில்லை.

### பேரம் பேசும் சக்தி

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலையகத்தின் தனிப்பெரும் கட்சியாக ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தது.அமரர் தொண்டமான் அரசியலில் "கிங் மேக்கராக " விளங்கினார். ஆட்சியில் அமரப்போகும் அரசினை தீர்மானிக்கும் வல்லமை அவருக்கிருந்தது.பேரம் பேசும் சக்தியை மையப்படுத்தி ஆட்சியாளர்களை வலியுறுத்தி பல்வேறு உரிமைகளையும் மலையக மக்களுக்கு பெற்றுக் கொடுக்க அவர் முனைந்தார்.இது சாதக விளைவுகள் பலவற்றுக்கும் உந்துசக்தியானது என்பதையும் மறுப்பதற்கில்லை.எனினும் பிற்காலத்தில் இனவாதிகளின் கண்களை இது உறுத்திய நிலையில் அவர்கள் தங்களுக்குள் ஐக்கியத்தின் ஊடாக பலத்தை உருவாக்கிக் கொண்டு பேரம்பேசும் சக்தியை மழுங்கடிக்கச் செய்வதில் வெற்றி கண்டனர்.இதனால் தொழிலாளர்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் தேக்க நிலை ஏற்பட்டது.

இது ஒரு புறமிருக்க மலையக அரசியல் தொழிற்சங்கவாதிகளின் ஐக்கியமற்ற போக்குகள், விரிசல் நிலை என்பனவும் மலையக மக்களின் உரிமைகளுக்கு ஆப்பு வைத்து வருவதாகவும் கருத்து வெளிப்பாடுகள் இருந்து வந்தன.ஆட்சியாளர்கள் இவ்விரிசல் நிலையை சாதகமாக்கிக் கொண்டு பிரித்தாளும் கொள்கையை முன்னெடுத்து மலையக சமூகத்தை வேரறுத்து வருவதாகவும் விசனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. இதில் உண்மை இல்லாமலும் இல்லை. மலையகக் கட்சிகள் ஆளுக்கொரு பக்கமாக இழுத்துக் கொண்டு சுயநலனை மையப்படுத்தி காய் நகர்த்தல்களை மேற்கொண்டன. இது தொழிலாளர்களின் ஒற்றுமையை சீர்குலைத்ததோடு அவர்களின் நலன்களையும் கேள்விக்குறியாக்கியது. இந்நிலையில் மலையக அரசியல் தொழிற்சங்கவாதிகள் ஐக்கியத்துடன் செயற்பட வேண்டியதன் அவசியமும் பலராலும் வலியுறுத்தப்பட்டது. வடக்கு கிழக்கு அரசியல்வாதிகள் தமக்கிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றபோதும் பொதுவான விடயங்களில் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதாகவும், அத்தகைய ஒன்றிணைவு மலையக அரசியல்வாதிகளிடையேயும் எதிரொலிக்க வேண்டுமென்றும் பலரும் வேண்டிக்கொண்டனர்.

இந்நிலையில் மலையக கட்சிகள் தமது கருத்து முரண்பாடுகளை புறந்தள்ளிவிட்டு சமூக நலனுக்காக இப்போது குரல் கொடுக்க துணிந்திருக்கின்றன.இது ஒரு நல்ல சகுனமாகும் என்பதோடு எதிரணியினருக்கு இது ஒரு சாட்டை அடியாகவும் அமையும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்..அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் எதுவாக இருந்தாலும் சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் பயன்படுத்துவதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தயங்காது.மலையக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பில் பேச்சு வார்த்தை நடத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவுடன் ஆயத்தமாகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்திருக்கின்றார். இதேவேளை மலையகத்தின் தொழிற்சங்க நிலைமைகள் தற்போது அதிருப்தியான வெளிப்பாடுகளைக் கொண்டுள்ளன. தொழிற்சங்கங்கள் இலக்கு மாறிச் செயற்படுகின்றன.எனவே தொழிற்சங்கங்கள் தனது பிழைகளை திருத்திக் கொண்டு முன்செல்லவில்லையாயின்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# உரிமைக்காக எழுதமிழா
## அறிக்கை 2023

தமிழ் இளையோர் அமைப்பு
Tamil Youth Organization

*13.06.2023*
***ஊடக அறிக்கை***
***உரிமைக்காக எழுதமிழா 2023***



தமிழின அழிப்பிற்கு நீதிகேட்டு,ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழீழம் விடுதலை அடையும்வரை "உரிமைக்காக எழுதமிழா" என்ற கோசத்துடன் தமிழ் இளையோர் அமைப்பினால் 12.06.2023 அன்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இப்போராட்டமானது பெல்சியம் தலைநகர் புறுசலில் அமைந்துள்ள பூங்காவில் ஆரம்பித்து, பறைஒலிகளுடன் உணர்வெழுச்சியோடு மக்கள் தமிழீழத் தேசியக்கொடியினை தாங்கிய வாறும் எங்களுடைய வேண்டுகைகளை பதாதைகள் மூலம் வெளிப்படுத்தியவாறும் பூங்காவிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய முன்றல் வரை, கொட்டொலிகளை எழுப்பியவாறு மக்கள் பேரெழுச்சியுடன் உணர்வோடு போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். இவ் போராட்டத்தை வேற்றினமக்கள் உணர்வோடு உன்னிப்பாக அவதானித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



இம்மாபெரும் போராட்டத்தில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டு, தமிழீழத் தேசியக் கொடியினை தாங்கியவாறு எமது உரிமை களை முழக்கமாக எழுப்பியதோடு, எமது தேவைகளை பதாகைகளூடாக வெளிப்படுத்தி, உணர்வெழுச்சியோடு சுட்டெரிக்கும் வெயிலின் மத்தியில் ஐரோப்பிய முன்றலில் போராட்டத்தில் மக்கள் கலந்துகொண்டமையானது, தமிழர்களாகிய எமக்கு என்ன தேவை என்பதை அனைத்துலக நாடுகளுக்கு தெளிவாக எடுத்தியம்பிநிற்கின்றது.




ஐரோப்பிய ஒன்றியத்தினை பேரணி சென்றடைந்ததும் மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதலில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, பின்னர் தமிழீழத்தேசிக்கொடி ஏற்றப்பட்டு, அதனைத்தொடர்ந்து பெல்சியம் நாட்டின் தேசியக்கொடி ஏற்றிவைக்கப்பட்டது. தொடர்ந்து மாவீரர் திருவுருவப்படங்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டதோடு, மலர்மாலைகளும் அணிவிக் கப்பட்டது. அதைத்தொடர்ந்து அகவணக்கம் மற்றும் உறுதிமொழி இடம்பெற்றது. உறுதிமொழி நடைபெற்றபோது இளையோர்கள் அனைவரும் மேடையில் உணர்வோடு பங்கெடுத்திருந்தனர்.



அடுத்து, இன்றைய போராட்டம் தொடர்பான சிறிய தொகுப்பு தமிழிலும், சர்வதேச சமூகத்தை நோக்கிய ஈழத்தமிழர் பேரவை ஐக்கிய இராச்சியத்தின் வேண்டுகோள் உரை ஆங்கில மொழியிலும் ஆற்றப்பட்டன. அதைத்தொடர்ந்து வேற்றினத்தவர் உரை திரு.டென்னிஸ் ஸ்சோர்ட்ஸ் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.




தொடர்ந்து பிரித்தானியா கலைபண் பாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் கருத்தூட்டல் மிக்க விழித்தெழு தமிழா என்ற தலைப்பில் சம்பாசனைசிறப்பாகஅமைந்திருந்தது. சிறப்புரை மற்றும் பிரெஞ்சு, ஆங்கிலம் மற்றும் யேர்மன் மொழிகளில் உரைகள் வழங்கப்பட்டது.




இறுதிநிகழ்வுகளாக பிரகடனம் வாசித்தல் மற்றும் பிரித்தானியா கலைபண்பாட்டுக் கழகத்தின், உணர்வேற்றுகின்ற எழுச்சி நடனம் நடைபெற்றது. இறுதியாக தமிழீழ தேசியக்கொடி மற்றும் பெல்சியம் நாட்டின் தேசியக்கொடி கையேற்றலுடன் நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் என்ற உரமேற்றல் பாடல் இசைக்க தமிழீழத் தேசியக்கொடிகளைக் கரமேந்தி இளையோர்கள் உணர்வெழுச்சிகளை வெளிப்படுத்தியிருந்தனர்.







தமிழீழதேசம் விடுதலை அடையும்வரை எத்தடைவரினும் அத்தடைதகர்த்து, மாவீரர்கள் காட்டிய பாதையில் அவர்கள் ஈகங்கள் வழிநின்று, தமிழீழத் தேசியத்தலைவரின் வழிகாட்டலில் தொடர்ந்தும் போராடுவோம் என்ற, அறிவிப்பாளர்களின் உணர்வின் வரிகளோடு உறுதியெடுத்து தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம் என்ற உரத்த பேரொலியோடு உரிமைக்காக எழுதமிழா போராட்டம் நிறைவுபெற்றது.



தமிழ் இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டமானது, சமகாலத்தில் ஒரு செய்தியை சொல்லிநின்றதோடு, தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்போராட்டம் எம்இளையோர்களால் வீச்சோடு கொண்டு செல்லப்படும் என்பதை கட்டியம் கூறிநிற்கின்றது.

***"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்."***

• • •

# மழைக்காடுகளை நிர்வகிக்க பூர்வீகக் குடிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் இந்தோனேசிய அரசு

## பகுதி 1

தமிழில்: ஜெயந்திரன்

மரத்தால் செய்யப்பட்ட வில்லைத் தோளில் கொழுவிக்கொண்டு, மரகதப் பச்சைநிறமான காட்டிலே வெறுங் காலுடன் நடந்துகொண்டிருந்த ஜோசப் ஒகொணி, தன்னைச் சூழ்ந்திருந்த உலர்வலய தாவரங்களையும், தூரத்திலே தெரிந்த அவரது ஆற்றங்கரைக் கிராமத்தையும் சுட்டிக்காட்டுகிறார்.



"இது எனது 'பாசார்' என்று சந்தையைக் குறிக்கும் இந்தோனேசிய மொழிச்சொல்லைப் பயன்படுத்திக் கூறினார். சாப்பிடுவதற்கான மிருகங்களையும், மருந்துத் தேவைக்கான தாவரங்களையும் வீடு கட்டுவதற்குத் தேவையான மரங்களையும் இங்கிருந்து நான் எடுத்துக் கொள்வேன்."

மரபுரீதியான சந்தைகளுடன் ஒப்பிடும் பொழுது, எந்தவிதத்திலும் மாசுபடுத்தப்படாது தூய்மையாக இருக்கும் இந்தக் காடு முற்றிலும் வித்தியாசமானது.

"இது முற்றிலும் இலவசமானது" என்று ஒகொணி *(Ogoney)* சமூகத்தின் ஓர் அங்கத்தவரான இந்தோனேசியாவின் கிழக்குப்புறத்தில் மிகவும் செழிப்பான காடுகளைக்கொண்ட மேற்குப் பாப்புவாவில் *(West Papua)* வசிக்கின்ற பூர்வீகக் குடிகளில் ஒன்றைச் சேர்ந்த ஜோசப் சிரித்துக் கொண்டு கூறினார்.

அது முற்றிலும் உண்மை என்று சொல்ல முடியாது. பல நூற்றாண்டுகளாக ஒகொணி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தக் காடுகளில் சாகுபடி செய்ததுடன் தமது உழைப்பினால் கிடைக்கும் பயன்களின் உதவியுடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இங்கே அவர்கள் அன்னாசி, சவ்வரிசி, இனிப்பு உருளைக்கிழங்கு போன்ற வற்றைப் பயிரிடுகிறார்கள். மான்களையும் பன்றிகளையும் அவர்கள் வேட்டையாடுகிறார்கள். அத்துடன் அந்த இடத்தில் மட்டும் கிடைக்கும் தாவரங்களை மருந்துக்குப் பயன்படுத்துகிறார்கள்.

அபரிமிதமாகக் கிடைக்கும் இயற்கை வளங்கள் தொடர்ந்து கிடைப்பதை உறுதிசெய்யும் பொருட்டு, ஒகொணிகளின் இந்தக்காடு ஒதுக்கப்பட்டிருப்பதுடன், அவர்களது பாரம்பரிய நம்பிக்கைகளின் படி அவை புனிதமானவையாகக் கருதப்படுவதனால், அவை யாராலும் தொடப்படாது இருப்பது மட்டுமன்றி, மிகக் கவனமாகப் பாதுகாக்கப்பட்டும் வருகின்றது.

"காட்டிலே தான் நாங்கள் முற்றுமுழுதாகத் தங்கியிருக்கின்றோம். அதனை யாரும் சுரண்ட வெளிக்கிட்டால் நிச்சயமாக அதனை நாங்கள் கடுமையாக எதிர்ப்போம்." என்று ஜோசப் மேலும் கூறினார்.

ஒகொணியைப் பொறுத்தவரையில், காடு சந்தை போன்றது. ஆனால் அதே நேரம் அதில் அதிகமான பகுதியை அவர்கள் புனிதமானதாகக் கருதுவதுடன் அதனை மூர்க்கத்தனமாகப் பாதுகாத்துவருகிறார்கள்.

ஒகொணியைப் போன்ற பூர்வீகக் குடிகளும் உள்நாட்டுச் சமூகங்களும் உலகின் நிலப்பகுதியின் அரைவாசியைப் பகுதியையும் 80 வீதமான தாவரங்களையும் விலங்குகளையும் நிர்வகித்துவருவதுடன், பல சந்ததிகளாக இயற்கையைப் பேணிப் பாதுகாப்பவர்களாகவும் விளங்கிவருகிறார்கள். பூகோளரீதியாக 37.7 பில்லியன்கள் தொன் நிறையுடைய காபனை சேமித்துவைத்திருக்கின்ற காடுகள், பூமியின் காலநிலையைச் சமநிலையில் வைத்திருப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

ஆனால் தற்போது மட்டுமே, பூர்வீகக் குடிமக்களும் உள்நாட்டுச் சமூகங்களும் மேலிடத்து நிர்வாகங்களால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. 2021 இல் நடைபெற்ற ஐநாவின் காலநிலை மாறு பாட்டு மாநாட்டில், ('கொப் 26' என்றும் அழைக்கப்படுகிறது) காடழித்தலை அவர்கள் தடுக்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் பட்சத்தில், 1.7 பில்லியன்கள் அமெரிக்க டொலர்களை இந்தச் சமூகங்களைத் தாபரிப்பதற்காக ஒதுக்கிவைத்திருக்கிறார்கள்.



"ஒரு சந்ததி இன்னொரு சந்ததிக்குச் சொல்லிக்கொடுக்கும் தொடர்ந்து நீடித்து நிலைக்கும் நடைமுறைகளைப் பயன்படுத்தி, அவர்கள் காடுகளைப் பேணிப்பாதுகாத்து வருகிறார்கள். அதே நேரம் தாவரங்களையும் விலங்குகளையும் பாதுகாத்து, சுற்றுச்சூழலுக்கும் தங்கள் வாழ்வாதாரத்துக்கும் அவசியமான சமநிலையைப் பேணிவருகிறார்கள்" என்று இலாபத்தை மையமாகக்கொள்ளாத மழைக் காட்டுச் சம்மேளனத்தில் தலைவராகப் பணி புரியும் இம்மானுவெலா பெறெங்கர் *(Emmanuelle Berenger)* கருத்துத் தெரிவித்தார். காடுகளைச் செயற்றிறன்மிக்க விதத்தில் பாதுகாப்பதற்கு சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டு அவர்கள் ஆதரிக்கப்படவேண்டும்.

### நீண்டகாலச் செயற்பாடு

பூர்வீகக்குடிகளின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்புச் செயற்பாடுகள் தொடர்பாக இந்தோனேசியாவிடமிருந்து நாங்கள் கற்றுக்கொள்ள முடியும். நிலங்களைக் குத்தகைக்குக் கொடுப்போர் தொடர்பான உரிமைகளை வலுப்படுத்தவும், நாட்டின் இயற்கை வளங்களை சிறப்பான முறையில் நிர்வகிக்கவும், அந்த அரசு 2016ம் ஆண்டில் பூர்வீகக் குடிகள் பயன்படுத்தும் காடுகளை சட்டபூர்வமான முறையில் அங்கீகரிக்கத் தொடங்கியது.



உலகளாவிய வகையில் பாரிய மழைக்காடுகளில் மூன்றாம் இடத்தை வகிக்கும் மழைக்காட்டைப் பரிபாலிக்கும் இந்தோனேசியாவின் சுற்றுச்சூழலுக்கும் வனங்களுக்குமான அமைச்சு, முன்னர் அரசின் நிர்வாகத்தின் கீழ் இருந்த கிட்டத்தட்ட நூற்றுக்கு மேற்பட்ட பழங்குடிகளின் காடுகளைக் கொண்ட 153000 ஹெக்ரேயர் நிலங்களை அந்தப் பூர்வீகக் குடிகளிடம் கையளித்திருக்கிறது.

கடந்த ஒக்ரோபர் மாதத்தில், மேற்கு பாப்புவா மாகாணத்தில் முதல் தடவையாக ஒகோணி இனத்தைச் சார்ந்த பூர்வீகக்குடிகள் வழமையாகப் பயன்படுத்தும் காடுகள், அரசினால் அங்கீகரிக்கப்பட்டன. இந்தக் காடுகள் 16,299 ஹெக்ரேயர் நிலத்தில் அமைந்திருக்கும் தாழ்நில உலர்வலயக் காடுகளைக் கொண்டிருப்பதுடன், டைனோசோருக்கு மிக நெருக்கமான இனமான 'எமு' *(emu)* என்ற பறவையைப் போன்று தோற்றமளிக்கும் 'சொர்க்கத்தின் பறவைகள்' *(Paradise birdss)* கசோவரிப் பறவைகள் *(cassowaries)* போன்ற பறவைகளையும் அதிகமாகக் கொண்டிருக்கிறது.

"எங்களுக்குக் கிடைத்த இந்த அங்கீகாரத்துக்காக நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்" என்று ஒகோணி இன மக்களின் கிராமங்கள் அனைத்தையும் உள்ளடக்கும் மேடிமாவட்டத்தின் தலைவியான யுஸரீனா ஒகொணி தெரிவித்தார். "காடுகளைப் பேணிப்பாதுகாப்பதில் நான் மிக அதிகமாகக் கவனஞ் செலுத்திவருகிறேன். ஏனென்றால் காடுகள் அழிக்கப்பட்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.



2017ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு நீண்ட, கடினமான செயற்பாட்டின் முடிவாக அந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.

ஒகொணி இனத்தவர் வாழ்ந்துவரும் பிரதேசத்தில் பாப்புவா சத்திய கெஞ்சனா *(Satya Kencana)* என்ற ஒரு மரநிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து தாம் பயன்படுத்தும் காடுகளுக்கான அங்கீகாரத்துக்காக அவர்கள் அரசுக்கு விண்ணப்பங்களை அனுப்பத் தொடங்கினார்கள்.

"மோஸ்கோனா இனத்தைச் சார்ந்த பூர்வீகக் குடிகளுக்குச் சொந்தமான பிரதேசங்களில் மிக அதிகமாக மரங்கள் தறிக்கப்பட்டதை நான் பார்த்திருக்கிறேன்" என்று அந்த மாவட்டத்தின் தலைவியாக இருக்கின்ற யுஸ்ரீனா தெரிவித்தார். "எங்களது காட்டுக்குள் இன்னும் யாரும் வரவில்லை. அவ்வாறான ஒரு நிகழ்வு எங்களது பிரதேசத்தில் நடைபெறுவதை நாம் விரும்பவில்லை.

அது ஒரு இலகுவான செயற்பாடாக இருக்கவில்லை.

நாம் பயன்படுத்தும் காடுகளுக்கான அங்கீகாரத்தின் முக்கியத்துவம் தொடர்பாக ஒகோணி இனமக்களில் அதிகமானோர் அறிந்தி

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## பொருளாதார ... தொடர்ச்சி ...

பகுதியாக மத்திய பகுதி காணப்பட்டாலும் இவ்வாறான வீதியோர வியாபாரிகளின் நிலமை கவலைக் கிடமே அதிகமான சத்தம் எழுப்பியும் வியாபாரம் செய்யக்கூடிய இடமாக இந்த இடம் மாறியுள்ளது உள்நாட்டு வெளிநாட்டு உற்பத்தி பொருட்களின் சந்தைப்படுத்தல் அதிகமாக இங்கு காணப்பட்டாலும் அதனை சந்தைப்படுத்தக் கூடிய வாய்ப்பு கிட்டுகின்ற போதும் பொருளாதார பின்னடைவு பணவீக்கம் போன்றன விழிம்பு நிலை மக்களை அது ஏமாற்றியுள்ளது தினக் கூலியாக ஒரு நாளைக்கு 1500இ2000 வரை உழைத்தாலும் அது குடும்ப ஜீவனாம்சத்துக்கு தற்கால நிலையில் போதாமையாக உள்ளது.

இது பற்றி கொழும்பு மத்திய பகுதி வியாபாரிகளின் குடும்ப தலைவிகளை சந்தித்து நிலவரம் தொடர்பில் கேட்டறிந்த போது இவ்வாறு தெரிவிக்கின்றனர்' ஒரு நாளைக்கு 2000 ரூபா உழைத்தால் அது மறு நாளே போதாது மிச்சம் பிடிக்க முடியாது முன்னர் உள்ள காலத்தை விடவும் இப்போதைக்கு வாழ்வது கடினமே பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதென்றால் இப்போதைய விலை கடந்த முறையை விடவும் மூன்மு மடங்காக அதிகரித்துள்ளது கணவன்மார் உழைத்து வருவதை எங்களால் எப்படி மிச்சம் பிடிப்பது எல்லா பொருட்களும் விலை அதிகமே மின்சாரக் கட்டணம் பல மடங்கு அதிகரிப்பை காட்டுகிறது'

'வியாபாரம் இப்போது குறைவு போதாது இதனால் பாதிக்கப்பட்டுள்ளோம் சில வேலை வீதியோர வியாபாரத்தின் போது பொலிஸார் அகற்றச் சொல்வார்கள் அவர்களது கடமையை அவர் செய்கிறார்கள் என்ன செய்வது சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியும் உள்ளது' என வீட்டு உபகரணப் பொருள் வியாபாரியான றம்சீன் தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் காலத்துக்கு காலம் வாக்குறுதிகளை வழங்கிய போதும் வியாபாரி கள் நடைபாதைகளை வியாபாரத்துக்கு பயன் படுத்துவது தொடர்பில் திட்டவட்டமான சட்டங் கள் எவையும் இல்லை என்பது நடை பாதை வியாபாரிகள் கொண்டுள்ள உண்மையான கரி சனையாகவுள்ளது)

**தொடரும்**

## சா(தி)தீ... தொடர்ச்சி ...

பொற்கொல்லர்களுக்கும் வேளாளர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

1922 இலும்,1926 இலும் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் கலகங்கள் நிகழ்ந்தன. பெரும் பாலான இந்தக் கலகங்கள் பள்ளர், நளவர் ஆகிய இரு சாதியாரும் சடலங்களைஎரிப்பது தொடர்பாக ஏற்பட்ட சண்டைகளாகும். 1931 ஆம் ஆண்டில் சடலத்தை எரிப்பதைத் தடுத்தப்போது கலகம் மூண்டது. அதே ஆண்டில் இந்தக் கிராமத்தில் மீண்டும் கலகம் மூண்டது. இதனால் மூன்று மாதகாலம் இப்பகுதியில் பொலிஸ் கண்காணிப்பு தொடர்ந்தது.

1933 ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்கர் ஒருவர் பாதணி(சப்பாத்து) அணிந்து கொண்டபோது கலவரம் மூண்டது. இக்கலவரத்தின் போது பலர் கொல்லப்பட்டனர். புங்குடுதீவு என்ற இடத்தில் உயர் சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதியினரின் வீடுகளுக்கு தீவைத்துக் கொழுத்தினர்.

### மதம்(சமயம் )மாறுதல்

மேற்குறித்த சாதிக் கலவரங்கள் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த பாதிரி ஒருவர் பெரும் எண்ணிக்கையிலான பள்ளர்களையும், நளவர் களையும் கத்தோலிக்கத்திற்கு மாற்றுவதற்குத் துணைசெய்தது.

அன்றய காலத்தில் யாழ்ப்பாணத்தில் "உயர்குடி" இந்துக்களே கோவில்களில் வழிபட அனுமதிக்கப்பட்டு வந்தனர். இவ்வாறே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலும் தாழ்ந்த சாதி இந்துக்கள்ஙனுமதிக்கப்படவில்லை.1950கள், 60களில் ஆலயப்பிரவேசப் போராட்டங்கள் யாழ்ப்பாணத்தில் எழுச்சி பெற்றன. 1956 சூலை 9 இல் நல்லூர் கந்தசுவாமி கோவில், வண்ணார்பண்ணைச் சிவன் கோவில், பெருமாள் கோவில் போன்ற பல புகழ்பெற்ற கோவில்கள் அனைவருக்கும் திறந்துவிடப்பட்டன. 1968 ஆம் ஆண்டில் பல நூற்றுக்கணக்கான தாழ்ந்த சாதி இந்துக்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம் பித்தனர்.

**தொடரும்**

## இடைநிறுத்தப் ... தொடர்ச்சி...

தொடர்பாடல்கள், பிராந்திய மற்றும் உலகின் உறுதித்தன்மை போன்றன தொடர்பில் பேச்சுக் களை மேற்கொள்ளும் பிளிங்டன் சீன தரப்பில் யாரை சந்திக்கப்போகின்றார் என்பதை தெரி விக்கவில்லை.

இதனிடையே. கடந்த செவ்வாய்க்கிழமை (13) சீனா வெளிவிவகார அமைச்சர் குயின் ஹாங்கை தொடர்புகொண்ட பிளிங்டன் இரு நாடுகளும் தொடர்ந்து தொடர்புகளை பேணுவது அவசியம் என்பதை விளக்கியதாகவும், அதற்கு பதிலளித்த சீனா அமைச்சர் தற்போதைய நிலைக்கும், நெருக்கடிகளுக்கும் யார் காரணம் என்பதை நீங்கள் அறிவீர்கள் என பதில் அளித்த தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இடைக்கால ... தொடர்ச்சி ...

தேவைப்பாடும் அவசியம். அவ்வாறான நிலை யிலேயே ஆரோக்கியமான ஒரு இடைக்கால கட்டமைப்ப உருவாக்க முடியும்.

## தொல்லியல் ... தொடர்ச்சி ...

மட்டும் அல்ல யாழ் பல்கலைக்கழகத்தின் துறை சார்ந்த நிபுணர்களையும், மாணவர்களையும் ஒன்றிணைத்து அகழ்வு பணியை மேற் கொள்ள வேண்டும் எனும் நீதிமன்றம் கட்டளை நடைமுறைப்படுத்தாது சிங்கள பௌத்தர்களை முதன்மையாகக் கொண்ட சிங்கள பௌத்த தொல்லியல் திணைக்களம் தொடர்ந்து தம் பணியை முன்னெடுத்து வருகின்றது.

தற்போது எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு மத்தியில் குருந்தூர் மலையை ஆண்டிய பிரதேச காணிகள் மற்றும் திரியாய பகுதியில் உள்ள காணிகள் சம்பந்தமாக தொல்லியல் திணைக்களம் தமது தேவைகளுக்காக அடையாளபடுத்தப்பட்டிருக்கின்ற காணிகளின் விஸ்தீரனம் சம்பந்தமாக ஆய்ந்து அறிவதற்கான ஒரு குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளதாக செய்திகள் வருகின்றன.

அதே நேரம் வடக்கில் தொல்லியல் திணைக்களம் காணிகள் அபகரிக்கப் படுவதற்கு மூலக்கர்த்தாவாக செயல்படுவர், பிரச்சனைகளுக்கு எல்லாம் காரணமாக காரணமானவராக இருப்பவர் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க அவர்களே. அவர் தொடர்பில் ஜனாதிபதி எவற்றையும் கூப்பிடவில்லை. அவருக்கு முதலாவது தண்டனை கொடுக்க வேண்டும்.பதவி விலகுமாறு கூற வேண்டும். ஆனால் இந்நாட்டில் அதனை எதிர்பார்க்க முடியாது. 2021 ஆம் ஆண்டில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புணர்வாழ்வு ராஜாங்க அமைச்சராக இருந்தவர்; நாட்டின் சட்டங்களையும் சிறைச்சாலை சட்டங்களையம் மீறி கொழும்பு மற்றும் அனுராதப்புறம் சிறைச்சாலைகளுக்குள் பிரவேசித்ததோடு; அனுராதப்புறம் சிறைச்சாலையில் அரசியல் கைதிகளை புலங்களில் நிற்க வைத்து அச்சுறுத்தி சுடுவதாக துப்பாக்கியை அவர்களின் நெற்றியில் வைத்துள்ளார். இது தொடர்பாக ஆராயவதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணை குழு அவர் பல்வேறு சட்டமிறல்கள் குற்றங்கள் உள்ளன. அதற்கு ஏற்ற தண்டனை கொடுக்க வேண்டும் என்று கூறியபோதும் இதுவரைக்கும் அது நடக்கவில்லை. வெறுமனே விதுர விக்ரம நாயகா அவர்களுக்கு எதிராக எதனையும் செய்யப் போவதில்லை என்பது மட்டும் உண்மையே.

அதே நேரம் தொல்லியல் திணைக் களம் அடையாளப்படுத்தி உள்ள காணிகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப் பட்டுள்ள ஆணை குழு முன்மொழியும் விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது கட்டாயம் அல்ல. அதற்கு மேற்கூறிய உதாரணம் போது மானது. நாட்டில் எத்தனையோ ஆணை குழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றின் அறிக்கைகள் எல்லாம் தூக்கி எறியப் பட்டன என்பதுவே வரலாறு. தற்போது அமைக்கப்பட்டுள்ள ஆணை குழுவும் சர்வதேசத்தையும், தமிழர்களையும் ஏமாற்றுவதற்கு அன்றி வேறொன்று அல்ல.

தற்போதைய ஜனாதிபதி நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு. 13ம் திருத்தம் முழுமையாக அமல் படுத்தப்படும் எனக் கூறியது போது சிங்கள பௌத்தப்பிக்குள் அதனை எதிர்த்து பெருந்திரளாக ஒன்றுகூடி நாடாளுமன்றம் வரை ஊர்வலம் சென்றதோடு அங்கு பதிமூன்றாவது திருத்த நகலையும் தீயிட்டு கொளுத்தினர். கொழும்பில் போராட் டங்களில் கண்ணீர் புகை மற்றும் நீர்தாரை பிரயோகம் செய்யும் படைத்தரப்பு அமைதி காத்ததோடு போராட்ட பிக்குகளுக்கு பாது காப்பாக அவர் அவர்களுக்கு பின்னால் ஓடிச் சென்றதை நாம் கண்டோம்.சனாதி பதிஆணை குழு அமைத்திருப்பதும் வாக்கு மற்றும் ஏமாற்று அரசியலே.

13-ஆம் திருத்தத்தில் கூறப்பட்டுள்ள வாறு மாகாண சபைகளை உள்ளடக்கி தேசிய காணிக் கொள்கை குழு அமைக்காது இதுவரை இழுத்தடிப்பு செய்யும் தெற்கின் ஆட்சியாளர்கள் மத்தியில் தற்போதைய ஜனாதிபதி தெற்கின் பிரதிநிதிகளை மட்டும் உள்ளடக்கிய குழுவிடம் தேசிய காணிக் கொள்கை உருவாக்குமாறு அறிவுறுத்தியுள்ளார். இதுவே தற்போதைய ஜனாதிபதியின் நரி தந்திரம்.

இக்குழு விசேடமாக வடகிழக்கில் சிங்களமயமாக்களை சட்ட ரீதியாக அங் கீகரிக்கும் கொள்கைகளையே உருவாக்கும். அதன் மூலம் வடகிழக்கில் சிங்கள பௌத்த தேவைகளையும், விரிவாக்கத்தையும் அமுல் படுத்தலாம்.இதுவே சனாதிபதியின் நோக் கம்.

இதற்கு முன்னோடியாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் அவர்கள் "வடகிழக்கில் நிறுவப்படும் விகாரர்களை இனவாத கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டாம்" எனக் கூறியுள்ளார். தற்போதைய ஜனாதி பதி நல்லாட்சி காலத்தில் பிரதமராக இருந்த போதே நாட்டிலும் வடகிழக்கிலும் எத்தனை விகாரைகள் அமைக்கப்பட வேண்டும் என கூறியது நினைவில் உள்ளது.

கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டில் சிங்கள பேரினவாதமே கொலோச்சு கின்றது. அதன் காவலர்களே நாட்டின் செல் நெறியை தீர்மானிக்கின்றனர். அதற்கு ஏற்பவே அரசியல்வாதிகள் தம் பயண பாதையை தீர்மானிக்கின்றனர். தமிழர்கள் இந்நாட்டில் தம் தாயகத்தில் சுதந்தி ரமாக வாழ வேண்டும் என சுயநிர்ணய உரிமையோடு வாழ்வதற்கான சூழ்நிலை உருவாக வேண்டும்

## மனிதர்களின்... தொடர்ச்சி ...

நோய் எதிர்ப்பு சக்தி, நரம்பு மண்டலம் மற்றும் சக்தி உற்பத்தி ஆகியவற்றை பலப்படுத்துகின்றது. சில குளிர்பானங்களில் இந்த அமினோ அமிலம் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளது. மனவலு மற்றும் உடல்வலுவை அதிகரிக்கும் நோக்கத்துடன் அது சேர்க்கபட்டிருந்தது. இந்த அமினோ அமிலத்தின் குறைபாடே வயதான தோற்றத்திற்கு காரணம் என்று கூறப்படுகின்றபோதும் அதனை உறுதிப் படுத்த முடியவில்லை என்கிறரர் பேராசிரியர் யாதவ்.

## இலங்கையில்... தொடர்ச்சி ...

அணுமின் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கவுள்ளது.

மின் உற்பத்தி நிலையத்தின் திறன் 300 மெகாவாட்களை எட்டும், இது ஒரு தீவு தேசத்திற்கு மிகவும் பொருத்தமான விருப்பமாகும்.

2032 ஆம் ஆண்டளவில் ரஷ்யாவின் தொழில்நுட்ப ஆதரவுடன் இலங்கை தனது முதலாவது அணுமின் நிலையத்தை நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளது.

## ஐ.நா மனித உரிமை ... தொடர்ச்சி...

அருணதிலக்க தலைமையிலான குழுவினர் கலந்து கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

முன்வைக்கப்படவுள்ள வாய்மூல அறிக்கைக்கு அமைய, இலங்கை சார்பில் பதிலளிக்கப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

## எல்லா துறை ... தொடர்ச்சி...

உதவும் என அவர் மேலும் தொவித்துள்ளார்.

கடந்த 13 ஆம் நாள் பலஸ்தீன அதிபர் சீனாவுக்கு சென்றபோதே இந்த உடன்பாடு எட்டப்பட்டது. சவுதி அரேபியாவுக்கும் ஈரானுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற் படுத்துவதில் வெற்றிகண்ட சீனா தற்போது பலஸ்தீனத்தில் அதனை மேற்கொண்டு அந்த பிராந்தியத்தில் தனது ஆளுமையை அதிகரிக்க முற்பட்டுள்ளதாக இஸ்ரேலிய இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பிரித்தானியா... தொடர்ச்சி ...

இவ்வாறு அதிகரிக்கப்படும் வட்டி விகிதத்தால் வீடுகளை வாங்கியவர்கள் அதிக பணத்தை மீள்செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலம் புதிய வீடுகளை வாங்குபவர்களும் அதிக வட்டியை கட்டவேண்டி இருப்பதால் வீடுகளை வாங்குபவர்களின் எண்ணிக்கையும் குறை வடைந்துள்ளது.

வட்டி விகித அதிகரிப்பின் தாக்கம் தற்போது தான் தெரிய வந்துள்ளது, அதன் தாக்கம் எதிர் வரும் 3 வருடங்களுக்கு இருக்கும் எனவே வீட்டு விலைகள் 2025 ஆம் ஆண்டு 35 விகிதத்திற்கும் அதிகமாக சரியலாம் என Bes-gent நிறுவனத்தின் தலைவர் சார்ளி லம்டின் தெரிவித்துள்ளார்.

## பௌத்த மயமாக்... தொடர்ச்சி...

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழிச்சி இயக்கத்தின் ஒருங் கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள், மற்றும் சட்டத்தரணியும் மனித உரிமை செயற் பாட்டாளருமாகிய வி.எஸ்.எஸ். தனஞ்சேயன் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், இதில் கருத்து தெரிவித்த தவத்திரு வேலன் சுவாமிகள்,

இனவழிப்பிக்கு எதிராக குரல் கொடுக்கும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகத்தினர் நேரடியாகவே கைதுகளுக்கும் அச் சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள்.

தமிழர் உரிமைகளுக்காக குரல் கொடுக் கும் பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது மதகு ருக்களோ எவராக இருந்தாலும் நீதிமன்றின் எந்தவொரு பிடியாணையும் பெறாது கைது செய்யப்படும் நிலமையே வடக்கு கிழக்கில் நிலவுகின்றது.

இறுதியாக பௌத்த மயமாக்கல் எனும் பெயரில் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்து விடப் பட்டுள்ள இனப்படுகொலையை பிரித்தானியா தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும்.

கனடாவை பின்பற்றி பிரித்தானியாவும் தமிழர்களுக்கு எதிராக தாயகத்தில் இலங்கை அரசால் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையே என்பதை அங்கீகரிக்க வேண்டும் என கோரிக்கை முன்வைத்துள்ளார்

## பலப்படுத்த... தொடர்ச்சி ...

தொழிற்சங்க கலாசாரம் வலுவிழக்கும் சூழ் நிலை உருவாகும்.தொழிலாளர்களுக்கு இது ஒரு அபாய அறிவிப்பாகும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டி இருக்கின்றனர். தொழிற்சங்கவாதிகள் தொழிற்சங்கத்தின் ஊடாக அரசியலுக்கு செல்லும் காய்நகர்த்தலை மேற்கொள்வதால் தொழிலாளர் உரிமைகள் புறக்கணிக்கப்படுவதாகவும் ஒரு குற்றச்சாட்டு உள்ளது.இதனிடையே மலையகத்தின் தொழிற் சங்கக் கட்டமைப்பை பலப்படுத்தி க்கொள்ள வேண்டியதன் அவசியத்தை பாராளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார் வலியுறுத்தி இருக் கின்றார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயமே தற்போது பெரிதாக பேசப்பட்டு வரும் நிலையில் அம்மக்களின் ஏனைய பிரச்சினைகள் மூடிமறைக்கப்பட்டு வருகின்றன.இது அநீதியான செயலாகும்.சம்பளப் பிரச்சினைக்கு அப்பால்இம்மக்கள்எதிர்நோக்கும்பிரச்சனைகள் இன்னும் அதிகமுள்ளன.இந்நிலையில் ஆட்சி யாளர்களை வலியுறுத்தி இவற்றுக்கான திர்வினைப் பெற்றுக் கொடுக்க மலையக கட்சிகள் ஓரணியில் திரண்டிருக்கின்றன. இந்திய வம்சாவளி மலையக மக்களின் தேசிய அபிலாஷை கோரிக்கைகள் பல சிவில் சமூக கலந்துரையாடலில் இனங்காணப்பட்டு தேசிய சர்வதேச அரங்குகளில் முன்வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் முற்போக்கு கூட்டணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பன முனைப்புடன் இச்செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் நிலையில் ஏனைய கட்சிகளும் மக்களின் நலன்கருதி இத்தகைய பொதுவான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வருதல் வேண்டும். கடந்த காலத்தில் மலையக மக்களின் மேம்பாடுகருதி தயாரிக்கப்பட்ட ஐந்தாண்டு மற்றும் பத்தாண்டு திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ள நிலையில் சமகால கோரிக்கைகளை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து நிறைவேற்றிக் கொள்ள அனைத்து கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியம் என் பதனை மறந்து விடுதல் கூடாது.

• • •

## மழைக்காடுகளை ... தொடர்ச்சி ...

ருக்கவில்லை. பிரதேச ரீதியிலான எல்லைகளை வரையறை செய்ய வேண்டிய நேரம் வந்த பொழுது, அந்த எல்லைகள் எங்கே அமைய வேண்டும் என்பது தொடர்பாக சமூகங்கள் இடையே கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டன. எமது விண்ணப்பங்களை உறுதிசெய்ய முதல், அரச அதிகாரிகள் பல தடவைகள் காடுகளை வந்து பார்க்க வேண்டியிருந்தது.

பாப்புவா பிரதேசத்தில் வாழும் மக் களுக்கான அங்கீகாரத்தைக் கொடுப்பதற்கு அரசு நீண்ட காலத்தை எடுத்தது என்று பனா பாப்புவாவைச் (Pana Papua) சேர்ந்த சுல்பியான்ரோ (Sulfianto) கூறினார். பேர்க்கும்புலன் ஹ_மா (Per-kumpulan HuMa) இந்தோனேசியா என்ற அமைப்பின் உதவியுடன் பூர்வீகக்குடிகளின் பிரதிநிதிகளையும் உள்வாங்கி ஒகோணி இனத்தவர்களுக்கும் மேலும் ஆறு இனத்தவர்களுக்குமான எல்லைகளை அரசு வரையறை செய்தது.

ஆகக்குறைந்த ஏழு பரம்பரைகளாக ஒகொணி இனத்தவர் இந்தக் காடுகளில் பயிர்ச் செய்கையை மேற்கொண்டுவருகிறார்கள்.

இந்தச் செயற்பாட்டின் ஒரு அங்கமாக சுற்றுச்சூழலின் நிலைத்தன்மையைப் பேணிப் பாதுகாப்பதுற்குப் பெயர்போன ஒகோணி பண் பாடு தொடர்பாக பனா பாப்புவா என்ற அமைப்பு ஒரு ஆய்வை மேற்கொண்டிருந்தது.

மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி ஏழு பரம்பரைகளுக்கு மேலாகத் தொடருகின்ற இந்த இனம், சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டுவருகின்றது. பாம் இன மரங்களிலிருந்து கிடைக்கும் சவ்வரிசி, மருத்துவக் குணங்களுக்குப் பெயர்போன சிவப்பு நிறமான புவா மெறா (buah merah) பழம் போன்றவற்றை காடுகளில் அனுமதி வழங்கப்பட்ட இடங்களில் இவர்கள் சாகுபடி செய்துவருகிறார்கள்.

“அது மிகவும் அழகான இடம்” என்று ஜோசப் வதியும் அதே கிராமத்தைச் சேர்ந்த 41 வயது நிரம்பிய றோசலீனா ஒகோணி தெரிவித்தார். “உணவுப் பயிர்களைச் சாகுபடி செய்யும் வயல்கள் எங்களுக்கு உண்டு. எங்களுக்குத் தேவையானதை மட்டுமே நாங்கள் சாகுபடி செய்வோம். முற்றைய இடங்களுக்குள் உள்ளே நுழைவதற்குக் கூட அனுமதி இல்லை. வேட்டையாடுவதையோ அல்லது வேறு எந்தச்செயற்பாட்டைச் செய் வதையோ யாரும் நினைத்துப்பார்க்கக்கூட முடியாது.”

இவ்வாறான செயற்பாடுகளினால் இந்த மழைக்காடு பாதுகாக்கப்பட்டு வருகிறது. 1990ம் ஆண்டுக்கும் 2020ம் ஆண்டுக்கும் இடையேயான காலப்பகுதியில், ஒகோணிகள் வாழும் பிர தேசத்தில் 51 ஹெக்ரேயர் காடு இழக்கப்பட்டது என்று ஒரு இந்தோனேசிய அமைப்பான சம்தானா (Samdhana) அமைப்பு தாம் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் தெரிவித்திருந்தது. இது வருடாந்த மழைக்காட்டு இழப்பின் 0.1 வீதமாகும்.

2001ம் ஆண்டுக்கும் 2021ம் ஆண்டுக்கும் இடையில் காடிழப்பு வீதம் ஒவ்வொரு வருடமும் 0.5 வீதமாக இருந்ததாக, நுசந்தரா அட்லஸ் என்ற காடழிப்பைக் கண்காணிக்கும் ஒரு சுயாதீன அமைப்பு கணிப்பை மேற்கொண்டிருந்தது.

“பூர்வீகக்குடிகள் தங்களது காடுகளைப் பேணிப்பாதுகாத்து வருகிறார்கள் என்பதற்கான சான்றுகள் இருக்கின்றன” என்று மேற்குறிப்பிட்ட அமைப்பின் பாப்புவா பிரதேசத்துக்கான இணைப்பாளராகப் பணியாற்றுகின்ற யூனுஸ் யும்ரே தெரிவித்தார். “பாரம்பரிய பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள், நிலப்பயிர்ச்செய்கை, மட்டுப்படுத்தப்பட்ட பாவனை போன்ற காரணங்களால் காழிப்பு மிகவும் குறைவாக இருக்கின்றது” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்திலே மிகவும் அதிகமாகக் கிடைக்கும் புவா மெறா (bua merah) என்ற பழம் மருத்துவ குணங்களைக் கொண்டது.

உணவு, மருந்து, கட்டடப்பொருட்கள் போன்றவற்றுக்கான மூலவளங்களை வழங்கு வதோடு, காலநிலை மாற்றத்தின் காரணமாக, அரவாக் (Arfak) மலைகளின் அடிவாரத்தில் ஓடுகின்ற பெரும் நதிகளின் காரணமாக ஏற்படும் மழைவெள்ளத்திலிருந்து நிலத்தைப் பாதுகாக்கவும் இந்தக் காடுகள் பெருமளவுக்கு உதவுகின்றன.

**நன்றி: அல்ஜஸீரா**

### அன்பு நேயர்களுக்கு!

எமது எதிர்கால சிற்பிகளான தமிழ் சிறார்களின் தமிழ்மொழி மற்றும் பண்பாட்டு மேம்பாட்டினை இலக்காக கொண்டு வெளிவரும் இலக்கு வார இதழின் சிறுவர் தளத் திற்கான தங்கள், ரைகள், கவிதைகள், ஓவியங்கள் மற்றும் வாழ்வுக்கு வழிகாட்டும் தமிழர் நாகரீகம் தொடர்பான சிறு குறிப்பு கள் ஆகியவற்றை பகிர்ந்து ஓர் செழிப்பான நிலைத்த எதிர்கால தமிழ் சந்ததியை உருவாக்க இணையுமாறு இலக்கு உங்களை வரவேற்கிறது!

தொடர்புகளுக்கு : info@ilakku.org

## வானம் ஆகிய கடலிலே என் கனவுகள் முகில்கள் போன்று மிதந்து திரிகின்றன....

நீர்வட்டத்தினால் எப்படி அந்த முகில்களினால் மழை பெய்கிறதோ, அவ்வாறு என் முயற்சியினாலும் என் கனவுகள் நிறைவேறும் ........ மழையின் மூலம் எப்படி மனிதர்கள் நன்மை அடைகின்றனரோ, அவ்வாறு என் கனவுகள் மூலமாகவும் அடைவார்கள்......

என் கனவுகள் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் பயணித்து கொண்டிருக்கின்றேன்........

கண்டிப்பாக ஒரு நாள்.....

**சு.திகழினி** - திருகோணமலை



**கே.மோனிக்கா** - தி/கலைமகள் மகா வித்தியாலயம்



**சு.துவாகீஸ்** தி/விபுலானந்தா கல்லூரி